# வடமலையான் மருத்துவமனை நலம்

Vadamalayan Maruthuvamanai Nalam Tamil Monthly

மலர் 17 இதழ் 2 ஜனவரி 2026 விலை ரூ.15

facebook.com/vadamalayan.madurai www.vadamalayan.org enquiries@vadamalayan.org





# வெற்றிக்குத் தயாராகுங்கள்!


VADAMALAYAN
Memorial Trust
ஊர் கூடி
உதவுவோம்...
ஊர்கூடி உதவுவோம்
பழைய பேப்பரைக் கொடுப்போம்!
உயிர்களை காப்போம்!
உயிர்க் கொல்லி நோய்களிலிருந்து உதவிடும் வகையில் வடமலையான் மருத்துவமனை செயல்படுத்திவரும் “ஊர் கூடி உதவுவோம்” திட்டத்திற்கு நமது வீட்டில் சேகரித்து வைத்திருக்கும் பழைய பேப்பர்களை (நாளிதழ் மற்றும் வார இதழ்) கொடுத்து உதவி உயிர்காக்கும் சேவையில் உதவுங்கள்
தொடர்புக்கு 82202 55551
Since 1957
வடமலையான் மருத்துவமனை
9A, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம். மதுரை-625002
போன்: 0452-3545400 (100 Lines) 2545400.
For Emergency: 0452 250 1033

Vadamalayan Maruthuvamanai Nalam Tamil Monthly

Vol. 17 | Issue - 2 | January 2026

# வடமலையான் மருத்துவமனை
# நலம்
## மருத்துவ மாத இதழ்



1957-ம் ஆண்டு செப்டம்பர் 15 வடமலையான் மருத்துவமனை துவக்கவிழாவில் பெருந்தலைவர் காமராஜருடன் நிறுவனர் டாக்டர் திரு.வடமலையான் அவர்கள்.

பதிப்பாசிரியர்
டாக்டர் V.**புகழகிரி**

செய்தி ஆசிரியர்
L.K.**கவிதா**

ஆசிரியர் குழு
டாக்டர் V.**பாப்புநாதன்**
டாக்டர் B.R.J.**கண்ணன்**
டாக்டர் K.**பத்மினி**
டாக்டர் D. **டேவிட் பிரவீன்குமார்**
டாக்டர் R.M.**ஹேமநாத்**
டாக்டர் S.**அழகுகணேஷ்**

சட்ட ஆலோசகர்
D.**நல்லதம்பி** B.A., B.L.,

Owned and Published by
Dr.V.Pugalagiri
from 9-A, Vallabhai Road,
Chokkikulam, Madurai - 625 002 and
Printed by Mrs.L.Saroja,
at Sree Vinayaga Screens,
92, Parthasarathi Street,
S.S.Colony, Madurai - 625 010.

அன்பு நண்பர்களே!

வணக்கம்!

வாழ்க்கை என்பது ஒரு நிரந்தரமான சவால். அதில் வெற்றிபெற, உங்களுக்கு வெளியில் இருந்துவரும் உந்துதலைவிட, உங்களுக்குள் எழும் உந்துதலே மிகவும் முக்கியம். நீங்கள் தவறவிட்ட நாள்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கு நீங்கள் எடுத்துவைக்கும் முதல் அடியை இன்றைய நொடிதான் தீர்மானிக்கிறது. கடந்த காலத்தின் சுமைகளைத் தூக்கி எறியுங்கள்.

நீங்கள் எந்த ஒரு குறிக்கோளை அடைய விரும்பினாலும், அதை அடைய ஒவ்வொரு நாளும் சிறிய இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். அந்த இலக்குகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் போதுதான் பெரிய மாற்றத்தை உருவாக்கமுடியும். தோல்வி என்பது வெற்றிக்கு எதிரானது அல்ல; அது வெற்றியின் ஓர் அங்கம்.

உங்கள் திறன்கள், தனித்துவமான சிந்தனைகள் மற்றும் உறுதி ஆகியவற்றின் மதிப்பை உணருங்கள். வெறும் கனவுகள் காண்பதால் எந்தவொரு பயனும் இல்லை. கனவுகளை திட்டங்களாகவும், திட்டங்களைச் செயல்பாடுகளாகவும் மாற்றும்போதுதான் முன்னேற்றம் தொடங்குகிறது. எனவே யோசிப்பதை நிறுத்திவிட்டு, செயல்படத் தொடங்குங்கள். வெற்றி உங்களுடையதாகும்!

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

**வ.புகழகிரி**
பதிப்பாசிரியர்

Since 1957



# தலைக்காயத்துக்கு பிரத்யேக சிகிச்சை!

## நவீன நரம்பியல் அறுவைசிகிச்சை வசதி

திண்டுக்கல் மாவட்டம் தமிழகத்தின் அதிகளவு பரப்பளவு கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது. வாகன ஓட்டிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. அதிவேகமாக வாகனங்களை இயக்குவது மோசமான விபத்துகளுக்கு வழிவகுக்கிறது. கடந்த 2019, 20ம் ஆண்டுகளில் மட்டும் 657 சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன. தோராயமாகக் கணக்கிட்டால் மாதத்துக்கு 21 முதல் 33 விபத்துக்கள் வரை நிகழ்ந்துள்ளன. இந்த விபத்துகளில் 50 சதவீதத்துக்கும் மேல் தீவிர சிகிச்சை தேவைப்படும் தலைக்காய விபத்துகளாகவே உள்ளன. இதுபோன்று சாலை விபத்துகளில் ஏற்படும் தலைக்காயங்களுக்கு உடனடி அவசர சிகிச்சை அளிக்காவிடில் உயிருக்கே ஆபத்து ஏற்படும். அந்தவகையில், நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானவருக்கு உடனடி சிகிச்சையளிப்பதற்காகவே நெடுஞ்சாலைக்கு மிக அருகிலேயே பல்துறை வசதிகளுடன் மிகச் சிறப்பாக செயல்பட்டுவருகிறது வடமலையான் மருத்துவமனை. இம்மருத்துவமனையின் நரம்பியல் அறுவைசிகிச்சைப் பிரிவு கூடுதல் சிறப்புடன் செயல்பட்டுவருகிறது. விபத்துகளில் காயமடைவோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக அதிநவீன தலைக்காய மற்றும் நரம்பியல் சிகிச்சை வசதிகள் இங்குள்ளன.அனைத்து நவீன உயிர்காக்கும் கருவிகளுடன்கூடிய பிரத்தேயக தீவிர சிகிச்சைப்பிரிவுடன் இத்துறை இயங்குகிறது. சாலை விபத்துகளில் தலைக்காயத்துக்கு ஆளானவோருக்கு சிகிச்சை அளிப்பதற்கான அனுபவமிக்க நரம்பியல் அறுவைசிகிச்சை மருத்துவர்களும், செவிலியர்களும் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளனர்.அனைத்து வசதிகளுடன்கூடிய நவீன நரம்பியல் அறுவைசிகிச்சை அரங்கமும் அமைந்துள்ளது.

**நரம்பியல் துறையில் அளிக்கப்படும் சிகிச்சைகள்:**

1.மிதமானது முதல் சிக்கலானது வரையிலான தலை மற்றும் முதுகுத்தண்டுவட சிகிச்சை.

2.அனைத்துவித மூளை மற்றும் முதுகுத்தண்டுவட பாதிப்புகளுக்கான சிகிச்சை (Cervical to Coccyx ).

3. மூளை, தண்டுவட பாதிப்புகளுக்கு Shunt பொருத்துவது.

4.வலிப்பு நோய்க் கண்டறிதல் மற்றும் சிகிச்சை.

5.மூளை ரத்தக்குழாய் அடைப்பைக் கண்டறிதல் மற்றும் Digital Subtraction Angiography-DSA சிகிச்சை.

6.பச்சிளங் குழந்தைகளுக்கான மூளை மற்றும் தண்டுவட சிகிச்சை.

7.மூளை முடக்குவாத மற்றும் ரத்தக்கசிவுக்கான சிகிச்சை.

8.மூளை மற்றும் தண்டுவடத்தில் ஏற்படும் கட்டிகளுக்கான கதிர்வீச்சு சிகிச்சை.

இங்குள்ள நரம்பியல்அறுவைசிகிச்சைத்துறை தேசிய நரம்பியல் அறுவைசிகிச்சை நிறுவனங்கள் / துறைகளுக்கு இணையான சிகிச்சையை வழங்க முனைப்புடன் செயலாற்றிவருகிறது.பல்துறை சிகிச்சை வசதிகளுடன் செயல்படும் இம்மருத்துவமனை திண்டுக்கல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.


**மேலும் விவரங்களுக்கு: 73970 11222**

**வடமலையான்**
**மருத்துவமனை(பி)லிமிடெட்**
Since 1957

649 A/2 , அங்கு நகர், திண்டுக்கல்-624004.

போன்: 0451 3561000 , 2461000(100 Lines). Emergency: 0451 244 44 44

# 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மொபைல் கொடுப்பதன் ஆபத்துகள்!



டாக்டர் **U. ஸ்ரீதுர்கா** MD, MRCPCH, FNB(Paed. Intensive Care)
*குழந்தைகள் தீவிர சிகிச்சை நிபுணர்*

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மொபைல் போன் அல்லது மற்ற மின்னணுத் திரைகளை (TV, Laptop, Computer) கொடுப்பது அவர்களது உடல் மற்றும் மனவளர்ச்சிக்குக் கடுமையான ஆபத்தை விளைவிக்கக்கூடும்.

2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு திரைகள் (Screens) மூலம் கற்றுக்கொள்ளும் திறன் கிடையாது. இவர்கள் குடும்பத்தினருடன் உரையாடுவதன் மூலமே மொழியையும் சமூகத் திறன்களையும் கற்றுக்கொள்கின்றனர்.

2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் செல்போன்களை பயன்படுத்துவதால், அவர்களுக்கு நடத்தைக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது.

**டோபமைன்** (Dopamine) **மற்றும் மூளை பாதிப்பு**

நமது மூளையில் மகிழ்ச்சி ஏற்படும்போது ‘டோபமைன்’ என்னும் வேதிப்பொருள் சுரக்கும். இது மூளைச் செயல்பாடுகளுக்கு உந்துதலாக அமைந்து, வாழ்வியல் திறன்கள் மேம்பட உதவும். ஆனால், திரைகளின் தாக்கத்தில் உள்ள குழந்தைகளுக்கு டோபமைன் அதிகப்படியாகச் சுரந்து, நாளடைவில் அது ஒரு போதைப் பழக்கம் போல உருவாகிறது. இதனால் அவர்கள் படிக்கும்போதோ அல்லது பாரம்பரிய விளையாட்டுகளில் ஈடுபடும்போதோ அந்த மகிழ்ச்சி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதன் விளைவாகச் சமூகத் தொடர்பு மற்றும் நடத்தைக் குறைபாடுகள் உருவாகின்றன.

**உலக சுகாதார நிறுவனத்தின்** (WHO) **பரிந்துரை**

* 2 வயதுக்குள்பட்ட குழந்தைகள் மின்னணுச் சாதனங்களைப் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் (குடும்ப உறுப்பினர்களுடன் பேசும் வீடியோ அழைப்புகளை மட்டும் அனுமதிக்கலாம்).

# நீங்கள் ஆரோக்கியமாக இருந்தாலும் உங்களுக்கு சர்க்கரை நோய் இருக்கலாம்...



## சர்க்கரை நோய் சரியாக கவனிக்கப்படாவிட்டால் ஏற்படும் விளைவுகள் ?

* மாரடைப்பு
* பார்வைக் குறைபாடு
* சிறுநீரக பாதிப்பு
* பாதம் பாதிப்பு / அகற்ற நேரிடும்
* நரம்பு சேதமடைதல்
* மூளைக்குச் செல்லும் ரத்தம் குறைதல் (பக்கவாதம்)

**சர்க்கரை நோய் என்றால் என்ன ?**
**ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு அதிகமாக இருத்தல்**

நவம்பர் 14 உலக சர்க்கரை நோயாளிகள் தினம்
ரத்தத்தில் சர்க்கரை யின் அளவுகள்

| | |
|---|---|
| சராசரியாக | >200mg /dl |
| உணவிற்கு முன் | >100mg /dl |
| உணவு உண்ட 2 மணிநேரத்திற்கு பின் | >140mg /dl |

## சர்க்கரை நோய் வகைகள்

* சர்க்கரை நோய் வகை 1 - இன்சுலின் சுரக்காமல் இருத்தல்
* சர்க்கரை நோய் வகை 2 - இன்சுலின் போதுமான அளவு சுரக்காமல் இருத்தல் அல்லது பாதிக்கப்பட்டிருந்தல் .
* கர்ப்பகால சர்க்கரை நோய் - கர்ப்பகாலத்தில் மட்டும் சர்க்கரை நோய் ஏற்படுதல் .

## சர்க்கரை நோய் வரும்முன் பாதுகாத்து கொள்ளும் வழிமுறைகள்

* உடல் எடையை சீராக வைத்தல்
* ஆரோக்கியமான உணவுப்பழக்கம்
* ரத்தஅழுத்தம் மற்றும் கொழுப்பை குறைதல்
* புகைப்பிடித்தலை நிறுத்துதல்

ஆரம்பகட்டத்திலேயே சர்க்கரை நோயை கவனித்து கட்டுப்பாட்டில் வைத்து தொடர்ந்து கண்காணித்து வந்தால் சர்க்கரை நோயால் வரும் சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

## கீழ்கண்டவர்கள் வயதுபாரபட்சமின்றி கண்டிப்பாக ரத்தத்தில் சர்க்கரை அளவைப் பரிசோதிக்க வேண்டும்.

* உடல் எடை அதிகமாக உள்ளவர்கள் .
* நீரிழிவு பாதிப்புள்ள குடும்ப உறுப்பினர்களை கொண்டவர்கள் .
* அதிகமாக மேற்கத்திய உணவு உண்பவர்கள் .
* உடல் உழைப்பு குறைவாக உள்ளவர்கள் .
* ரத்த அழுத்தம் , கொழுப்புச்சத்து உள்ளவர்கள்.

ஆரோக்கியமான உணவுமுறை, உடற்பயிற்சி, உயரத்துக்கு ஏற்ற உடல்எடைப் பராமரிப்பு போன்றவை நீரிழிவு பாதிப்பில் இருந்து காக்கும்.

9A, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002.
போன்: 0452 3545400, 2545400(100 Lines).
For Emergency: 0452 2501033

649 A/2, அங்கு நகர், திண்டுக்கல்-624004.
போன்: 0451 3561000 , 2461000(100 Lines)
For Emergency: 0451 244 44 44

* 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சம் ஒரு மணி நேரம் மட்டுமே திரை நேரமாக (Screen Time) இருக்கவேண்டும். அதையும் 15 நிமிடங்களாகப் பிரித்துக் காட்டுவது நல்லது.

* பெற்றோர் அல்லது காப்பாளரின் மேற்பார்வையில் மட்டுமே மின்னணுத் திரைகளைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

### மொபைல் பயன்பாட்டினால் ஏற்படும் முக்கிய ஆபத்துகள்

1. உடல்நலப் பிரச்சினைகள் (Physical Problems)

பார்வைக் குறைபாடு: மொபைலின் ஒளிரும் திரையை நீண்டநேரம் அருகிலிருந்து பார்ப்பதால் கண் பார்வைத் திறன் குறையும். மேலும் கண்களில் வறட்சி உண்டாகலாம்.

தூக்கமின்மை (Insomnia): தூங்குவதற்கு முன் திரைகளைப் பயன்படுத்துவது, தூக்கத்தை ஒழுங்குபடுத்தும் 'மெலடோனின்' ஹார்மோன் உற்பத்தியைப் பாதித்து, தூக்கத்தின் தரத்தைக் குறைக்கும்.

உடல்பருமன் (Obesity): ஒரே இடத்தில் உட்கார்ந்து மொபைல் பார்ப்பதால் உடல் உழைப்பு குறைகிறது. மேலும், மொபைல் பார்த்துக்கொண்டே சாப்பிடும்போது மூளைக்குத் திருப்தி உணர்வு கிடைக்காமல், அதிக உணவு உட்கொள்ளும் நிலை ஏற்பட்டு உடல் பருமன் கூடும்.

2. நடத்தை மற்றும் உணர்ச்சிப் பிரச்சினைகள் (Behavioural & Emotional Problems)

கோபம் மற்றும் எரிச்சல்: மொபைல் பார்க்க முடியாதபோது அதிகப்படியான கோபம், எரிச்சல் மற்றும் ஆவேசம் காட்டுதல் போன்ற நடத்தைச் சிக்கல்கள் ஏற்படலாம்.

சமூகத் தொடர்பு குறைபாடு: மற்றவர்களுடன் விளையாடுவது அல்லது பேசுவது குறைவதால், உணர்ச்சி கட்டுப்பாடு இல்லாமை, பதற்றம் மற்றும் மனச்சோர்வு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

3. மனவளர்ச்சி மற்றும் அறிவாற்றல் பாதிப்புகள் (Intellectual & Cognitive Impairments)

பேச்சுத் தாமதம்: மொபைலை அதிகம் பார்க்கும் குழந்தைகள் மற்றவர்களுடன் பேசும் வாய்ப்பை இழக்கிறார்கள். இதனை 'விர்ச்சுவல் ஆட்டிசம்' (Virtual Autism) என்று அழைக்கிறோம்.



அறிவாற்றல் குறைபாடு: அதிகத் திரை நேரம் குழந்தைகளின் கவனிக்கும் திறன் (Concentration) மற்றும் சிந்திக்கும் திறனைக் (Cognitive Skills) குறைக்கும்.

கவனச்சிதறல்: 'ஷார்ட்ஸ்' (Shorts) மற்றும் 'ரீல்ஸ்' (Reels) போன்ற வேகமான காட்சிகளைப் பார்ப்பதால், குழந்தைகளுக்குக் கவனச்சிதறல் மற்றும் அதிவேகச் செயல்பாடு (Hyperactivity) ஏற்பட வாய்ப்புள்ளது.

### பெற்றோருக்கான ஆலோசனைகள்

* குழந்தைகளுக்குப் புத்தகங்கள், பொம்மைகள் மற்றும் வெளிப்புற விளையாட்டுகளை அறிமுகப்படுத்தவேண்டும்.

* குழந்தைகள் முன் அதிக நேரம் மொபைல் பயன்படுத்துவதை பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும்.

* 2 வயதுக்கு மேல் மொபைல் கொடுத்தாலும், அதற்குத் தெளிவான நேர வரம்புகளை (Time Limits) நிர்ணயித்து அதில் உறுதியாக இருக்கவேண்டும்.

* குழந்தைகள் ஓடியாடி விளையாடும் சூழலை உருவாக்கும்போது, அவர்கள் செல்போனை தேடமாட்டார்கள்.

குழந்தைப் பருவத்திலேயே செல்போன் பயன்பாட்டைத் தவிர்ப்பது உடல் மற்றும் நடத்தைப் பிரச்சினைகளைத் தடுத்து ஆரோக்கியமான வளர்ச்சியைத் தரும். சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்குள்பட்டவர்கள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் இதுபோன்ற விழிப்புணர்வு மற்றும் சட்டங்கள் அவசியமானவை.

வடமலையான்
மருத்துவமனை (பி) லிமிடெட்
மதுரை
Since 1957




# தென் தமிழகத்தில் முதன்முறையாக அதிநவீன மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில்

## ARTIFICIAL INTELLIGENCE

- குறைந்த செலவு.
- குறைவான வலி மற்றும் இரத்த இழப்பு.
- உடல்நலத்தில் விரைவான முன்னேற்றம்.
- அறுவை சிகிச்சைக்கு அடுத்தநாளே நடக்கலாம்.
- துல்லியமாக செயற்கை மூட்டு பொருத்தப்படுகின்றது.
- செயற்கை மூட்டின் ஆயுட்காலம் நீடிக்கிறது.

மேலும் விபரங்களுக்கு : 95665 91238

9A, வல்லபாய்ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002
Ph.0452-3545400, 2545400(100 Lines), For Emergency- 0452 - 250 1033
web:www.vadamalayan.org vadamalayan hospitals

Since 1957

## கருப்பைவாய்ப் புற்றுநோயைத் தடுக்கும்

# எச்.பி.வி. தடுப்பூசி!

● டாக்டர் **P. அமுதா ராஜேஸ்வரி** MD, DCh.
**குழந்தைகள்நல சிறப்பு மருத்துவர்**



பெண்களுக்கு மிகப்பெரிய அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய கருப்பைவாய்ப் புற்றுநோய் (Cervical Cancer) குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. இந்த புற்றுநோய்க்கு முக்கிய காரணியாகக் கருதப்படும் வைரஸ்தான் ஹியூமன் பேப்பிலோமா வைரஸ் (HPV). இதைத் தடுக்கக்கூடிய பாதுகாப்பான வழி, எச்.பி.வி. தடுப்பூசி.

எச்.பி.வி. என்பது இனப்பெருக்க பாதையில் பரவக்கூடிய வைரஸ் தொற்றாகும். இது மற்ற வைரஸ்களை போலவே, உயிரணுக்களுக்குள் நுழைவதன் மூலம் தொற்றுநோயை ஏற்படுத்துகிறது. இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் பாலியல் உறவு கொள்ளும்போது நேரடியாக தோலில் இருந்து தோலுக்கு தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம் ஏற்படுகிறது.

எச்.பி.வி. பெரும்பாலானவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினாலும், சிலருக்கு இது நீடித்த தொற்றாக மாறி, புற்றுநோய்க்கு வழிவகுக்கும். குறிப்பாக, பெண்களில் கருப்பைவாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று எச்.பி.வி.தான்.

இந்த புற்றுநோய் இந்தியாவில் பெண்களுக்கு ஏற்படும் இரண்டாவது மிகப்பெரிய புற்றுநோயாகும். இந்த புற்றுநோய் பாதிப்பால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பெண்கள் உயிரிழக்கின்றனர். ஆனால், சிறுவயதிலேயே தடுப்பூசி செலுத்தினால், இந்த நோயை 90% வரை தடுக்கமுடியும் என்பது மருத்துவ ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பெண்களில், எச்.பி.வி. தடுப்பூசி 9 முதல் 14 வயதுவரை உள்ளவர்களுக்கு 2 டோஸ்களாகவும், 15 முதல் 45 வயது வரை உள்ளவர்களுக்கு 3 டோஸ்களாகவும் பரிந்துரைக்கப்படுகிறது. ஆண்களில், 9 முதல் 14 வயதுவரை உள்ளவர்களுக்கு 2 டோஸ்களாக தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது. எச்.பி.வி. தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும் ஆண் குழந்தைகளுக்கு பிற்காலத்தில் பிறப்புறுப்பு, ஆசனவாய், தொண்டைப் பகுதியில் புற்றுநோய் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. மேலும் எதிர்காலத்தில் அவர்களது மனைவிகளுக்கும் கருப்பைவாய் புற்றுநோய் வரும் அபாயம் குறைகிறது.

இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது. சாதாரணமாக தோள்பட்டை பகுதியில் சிறு வலி, வீக்கம், காய்ச்சல் போன்ற பக்கவிளைவுகள் ஏற்படலாம். ஆனால் பெரும்பாலானவர்கள் எந்தவிதமான தீவிர பக்கவிளைவுகளும் இல்லாமல் தடுப்பூசியை ஏற்கின்றனர்.

மத்திய அரசு தற்போது எச்.பி.வி தடுப்பூசியை தேசிய தடுப்பூசித் திட்டத்தில் சேர்க்க திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் அரசுப் பள்ளிகளில் படிக்கும் சிறுமிகளுக்கு இலவசமாக தடுப்பூசி வழங்கப்படும். இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேற்றமாகும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் இந்த தடுப்பூசி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். புற்றுநோயைத் தடுக்க ஒரு ஊசி போதும் என்ற உண்மையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு சிறிய தடுப்பூசி, ஒரு பெரிய உயிர் அபாயத்திலிருந்து பாதுகாக்கும். உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க, மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று, சரியான நேரத்தில் உங்கள் குழந்தைகளுக்கு எச்.பி.வி. தடுப்பூசியை செலுத்துங்கள்.

Since 1957

டாரிகா பிளஸ்
குழந்தைகள் நலத்திட்டம்



## குழந்தைகள் நலப்பிரிவு அம்சங்கள்

- 500-கிராம் எடையுள்ள குழந்தையும் ஆபத்து இல்லாமல் காப்பாற்றலாம். இந்திய மருத்துவத்தில் இதுவரை இல்லாத இமாலய சாதனை எங்களுடைய சிறப்பு அம்சமாகும்.
- லல்லு -பி அதிநவீன பச்சிளம் குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவு.
- டிரான்ஸ்போர்ட் இன்குபேட்டர்
- பிரத்தியேகமான பச்சிளம் குழந்தை வெண்டிலேட்டருடன் ஹை- பிரிக்குவென்சி ஆசிலேட்டர் - மதுரையில் முதன் முறையாக.
- ஜிராஃப் வார்மர்- மதுரையில் முதன் முறையாக
- குழந்தைகளுக்காக பிரத்தியேக தீவிர சிகிச்சைப் பிரிவு.
- குழந்தைகளை கவரும் வகையில் தனி அறைகள் மற்றும் விளையாட்டுப்பகுதிகள்

## டாரிகா பிளஸ் திட்டத்தின் அம்சங்கள்

- பிறந்த குழந்தைகள் முதல் 12 வயது வரை இத்திட்டத்தில் உறுப்பினராக சேரலாம்.
- இத்திட்டத்திற்கு முன்பதிவு கட்டணமாக ரூ.250 மட்டும் செலுத்தினால் போதும்.
- ஒரு முறை முன்பதிவு செய்த பிறகு ஒவ்வொரு முறையும் குழந்தை நல மருத்துவ நிபுணரின் ஆலோசனை பெற ரூ.150 செலுத்தினாலே போதும்.
- மேலும் அனைத்து ஆய்வக பரிசோதனைகளுக்கும் 15% சலுகை வழங்கப்படும். (சிறப்பு பரிசோதனைகள் இத்திட்டத்தில் வராது)

* நிபந்தனைக்கு உட்பட்டது

**மேலும் தொடர்புக்கு**

பச்சிளம் குழந்தைகள் மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு

Since 1957

NABH ACCREDITED


**வடமலையான் மருத்துவமனை (பி) லிட்**

9A, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002

0452-3545400, 2545400, 4361033-enquiries@vadamalayan.org, www.vadamalayan.org.

# முதுகெலும்பு வலியைப் போக்கும்

# நரம்பு வேர் அடைப்பு!

● டாக்டர் **M. சதாம் உசேன்** MS(Ortho)
*எலும்பியல் நிபுணர், திண்டுக்கல்*



நரம்பு வேர் அடைப்பு என்பது நாள்பட்ட முதுகெலும்பு மற்றும் நரம்பு வலிகளால் அவதிப்படுபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. இது ஒரு தற்காலிகத் தீர்வு என்றாலும், இது வலியைத் திறம்படக் குறைத்து, நோயாளியின் அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் மறுவாழ்வுப் பயிற்சிகளில் கவனம் செலுத்த உதவுகிறது.

நவீன மருத்துவ உலகில், நாள்பட்ட மற்றும் கடுமையான வலிகளுக்கு சிகிச்சையளிக்கப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. இவற்றில், நரம்பு வேர் அடைப்பு (Nerve Root Block) அல்லது நரம்பு வேர் ஊசி சிகிச்சை என்பது மிகவும் பயனுள்ள மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் நுண்துளை ஊடுருவல் வலி நிவாரண (Interventional Pain Management) நரம்பியல் செயல்முறையாகும். இந்தச் சிகிச்சையானது, முதுகுத்தண்டுவடத்தில் இருந்து கிளம்பும் நரம்பு வேர்களைச் சுற்றியுள்ள அழற்சி மற்றும் அழுத்தத்தால் ஏற்படும் வலிகளைக் குறைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## நரம்பு வேர் என்றால் என்ன?

மனித உடலில் உள்ள நரம்பு மண்டலத்தின் மிக முக்கியமான பகுதி முதுகுத் தண்டுவடம் ஆகும். இந்த முதுகுத் தண்டுவடத்தில் இருந்து, ஒவ்வொரு முதுகெலும்புக்கும் (Vertebra) இடையில் உள்ள துளைகள் வழியாக, உடலின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும் நரம்பு வேர்கள் பிரிகின்றன. இந்த வேர்கள்தான் கைகள், கால்கள் மற்றும் உடற்பகுதிக்கு உணர்ச்சி மற்றும் இயக்க சமிக்ஞைகளை எடுத்துச் செல்கின்றன.

## ஏன் நரம்பு வேர் அடைப்பு தேவைப்படுகிறது?

சில நேரங்களில், விபத்து, வயது மூப்பு, தவறான உடல் அசைவுகள் அல்லது நோய்கள் காரணமாக முதுகுத் தண்டுவடத்தில் உள்ள ஜவ்வு விலகுதல் (Herniated Disc), முதுகெலும்புகளுக்கு இடையில் உள்ள எலும்புத் தேய்மானம் (Spinal Stenosis) அல்லது எலும்பு வளர்ச்சிகள் (Bone Spurs) போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். இவை அருகிலுள்ள நரம்பு வேர்களை அழுத்துவதாலோ அல்லது உரசுவதாலோ நரம்பு வேர் பகுதியில் அழற்சி (Inflammation) ஏற்படுகிறது.

இந்த அழற்சி மற்றும் அழுத்தத்தின் விளைவாக, பின்வரும் அறிகுறிகள் ஏற்படலாம்:

• கழுத்து, முதுகு அல்லது இடுப்புப் பகுதியில் கடுமையான வலி.

• கை, கால்கள் அல்லது பிட்டம் வரை பரவும் கூச்ச உணர்வு, எரிச்சல் அல்லது மரத்துப்போதல்.

• ராடிகுலோபதி (Radiculopathy) எனப்படும் நரம்பு வலி.

• தசைகளில் பலவீனம்.

இத்தகைய வலிகள், அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைத்து, தூக்கமின்மை மற்றும் மனஅழுத்தத்தை ஏற்படுத்தலாம். இந்த நிலைகளில், அழற்சியைக் குறைக்கவும், வலியைப் போக்கவும் நரம்பு வேர் அடைப்பு சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது.

## சிகிச்சை முறை எவ்வாறு செயல்படுகிறது?

நரம்பு வேர் அடைப்பு என்பது, பாதிக்கப்பட்ட நரம்பு வேரின் சரியான இடத்தைக் கண்டறிந்து, அந்த

வடமலையான் மருத்துவமனை(பி)லிமிடெட்
Since 1957
மதுரை | திண்டுக்கல்

# NICU வசதியுடன் கூடிய மருத்துவமனை ஆடம்பரம் அல்ல, அவசியம்...



குழந்தைப் பிறப்பு ஓர் அற்புதமான நிகழ்வு அதில் இருக்கும் சிக்கல்களைக் கடந்து வந்தால் மட்டுமே அந்த மகிழ்ச்சியை உணரமுடியும். பிரசவத்தின்போது தாய் மற்றும் குழந்தைக்கு உடல் மற்றும் உணர்ச்சி ரீதியாக மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக குழந்தை தாயின் கருவிலிருந்து வெளியே வரும்போது பலவிதமான உடல் மாற்றங்களைச் சந்திக்க வேண்டும்.

கருவில் தாயின் செயல்பாடுகளைச் சார்ந்தே குழந்தை இருக்கும். சுவாசித்தல், உண்ணுதல், கழிவுகளை வெளியேற்றுதல் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் போன்றவை இதில் அடங்கும். ஒரு குழந்தை கருவிலிருந்து வெளியேறும் போது, அதன் உடல் இயக்கம் மாறும். நுரையீரல் காற்றை சுவாசிக்கும். இதயம் மற்றும் நுரையீரலின் சுழற்சி மாறுபடும். செரிமான அமைப்பு உணவை பதப்படுத்தவும் கழிவுகளை வெளியேற்றவும் துவங்கும். உடலில் உள்ள திரவங்கள் மற்றும் ரசாயனங்களை சமநிலைப்படுத்தவும், கழிவுகளை வெளியேற்றவும் சிறுநீரகங்கள் செயல்படத் தொடங்கும். கல்லீரல் மற்றும் நோயெதிர்ப்பு அமைப்பு தானாகவே செயல்பட ஆரம்பிக்கும்.

இவ்வாறு குழந்தையின் உடல் அமைப்புகள் ஒரு புதிய வழியில் ஒன்றாக செயல்பட வேண்டும். சில குழந்தைகளுக்கு கருப்பைக்கு வெளியே மாற்றம் நிகழ்வதில் சிக்கல் ஏற்படுகிறது. குறைப்பிரசவம், கடினமான பிறப்பு அல்லது பிறப்பு குறைபாடுகள் போன்றவை இந்த மாற்றங்களை சவாலாக்குகின்றன.

இதுபோன்ற நிலையில் உள்ள குழந்தைகளை தனிக்கவனத்துடன் பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. இக்குழந்தைகளைப் பராமரிக்க உதவுவதுதான் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு (Neonatal Intensive Care Unit- NICU)

## பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு (NICU) என்றால் என்ன?

பிறந்தவுடனே தீவிர மருத்துவப் பராமரிப்புத் தேவைப்படும் குழந்தைகள் இச்சிறப்புப் பிரிவில் பராமரிக்கப்படுவர். மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் பயிற்சி பெற்ற சுகாதார நிபுணர்களோடு இப்பிரிவு செயல்படுகிறது. நோயுற்ற குழந்தைகள் மட்டுமன்றி செவிலியர்களின் கவனிப்புத் தேவைப்படும் குழந்தைகளும் இப்பிரிவில் பராமரிக்கப்படுவர்.

ஒரு சில மருத்துவமனைகளில் இப்பிரிவில் பணியாற்ற தகுதி வாய்ந்த சுகாதார நிபுணர்கள் இருப்பதில்லை. இதன்காராணமாக இங்கு பிறக்கும் குழந்தைகள் தீவிர மருத்துவ சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்படுவார்கள். சிறப்பு கவனிப்புத் தேவைப்படும் குழந்தைகள் (NICU) வசதியுடன் கூடிய மருத்துவமனையில் பிரசவிக்கப்படுவதே பாதுகாப்பைத் தரும்.

## தீவிர பராமரிப்புத் தேவைப்படும் குழந்தைகள் யார்?

- குறைப்பிரசவத்தில் (கர்ப்பத்தின் 32 வாரங்களுக்கு முன்) பிறக்கும் குழந்தைகள், எடை குறைவாக (1.5 கிலோவுக்குக் குறைவாக) பிறக்கும் குழந்தைகள்.
- இரட்டையர்கள் மற்றும் கூடுதல் எண்ணிக்கையில் பிறக்கும் குழந்தைகள்.
- மூச்சுத்திணறல், இதயக்கோளாறு, தொற்றுகள் மற்றும் பிறவிக் குறைபாடு உள்ள குழந்தைகள்
- 16 வயதுக்குக் குறைவான அல்லது 40 வயதுக்கு மேல் உள்ள தாய் பிரசவிக்கும் குழந்தைகள். போதைப்பொருள் மற்றும் மதுப்பழக்கம் உள்ள தாய்க்குப் பிறக்கும் குழந்தைகள்,நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட தாய்க்குப் பிறக்கும் குழந்தைகள். உயர் ரத்த அழுத்தத்துக்கு ஆளான தாய்க்கு பிறக்கும் குழந்தைகள்.
- பால்வினை நோய்கள், கர்ப்பகாலத்தில் ரத்தப்போக்கு, ஒரே பிரசவத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை பிரசவிப்பது, மிகக் குறைந்த அல்லது அதிக அம்னோடிக் திரவ சுரப்பு
- 37 வாரங்களுக்கு முன்னதாகவோ அல்லது 42 வாரங்களுக்கு அதிகமான கர்ப்ப காலத்திலோ பிறக்கும் குழந்தைகள்.
- பிறப்பு எடை 1.5 கிலோவுக்குக் குறைவாகவோ அல்லது 4 கிலோவுக்குக் கூடுதலாகவோ உள்ள குழந்தைகள், சுவாசக்கோளாறுடன் பிறக்கும் குழந்தைகள், தொற்று பாதிப்புடன் பிறக்கும் குழந்தைகள், வலிப்பு மற்றும் குறைந்த ரத்த சர்க்கரை அளவுடன் பிறக்கும் குழந்தைகள், கூடுதல் ஆக்சிஜன், தீவிரக் கண்காணிப்பு, நரம்புவழி சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள், ரத்தமாற்றம் போன்ற நடைமுறைகள் தேவைப்படும் குழந்தைகள்.
- கர்ப்ப காலத்தில் முதல் மலம் (மெகோனியம்) அம்னோடிக் திரவத்திற்குள் சென்ற குழந்தைகள்.
- தொப்புள் கொடி (நச்சுக்கயிறு) கழுத்தில் சுற்றியவாறு பிறக்கும் குழந்தைகள்.

9A, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002.
போன்: 0452 3545400, 2545400(100 Lines).
For Emergency: 0452 2501033

649 A/2, அங்கு நகர், திண்டுக்கல்-624004.
போன்: 0451 3561000 , 2461000(100 Lines)
For Emergency: 0451 244 44 44

**சிகிச்சைக்கு முன், மருத்துவர் உங்கள் மருத்துவ வரலாறு, நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகள் மற்றும் ஒவ்வாமைகள் குறித்து முழுமையாக விசாரிப்பார். சிகிச்சைக்குப் பிறகு, உங்கள் மருத்துவர் வழங்கும் அனைத்து அறிவுறுத்தல்களையும் பின்பற்றுவது முக்கியம்.**

இடத்தை இலக்காகக் கொண்டு ஒரு சிறப்பு மருந்துக் கலவையைச் செலுத்தும் எளிய செயல்முறையாகும்.

செயல்முறையின்போது, நோயாளி பொதுவாக குப்புறப் படுக்க வைக்கப்படுவார். தொடர்ந்து சிகிச்சை நடைபெறும் பகுதியில் உள்ள தோல் பகுதி மயக்கமருந்து கொடுக்கப்பட்டு மரத்துப் போகச் செய்யப்படும்.

சிகிச்சைக்கு மிகவும் துல்லியமான வழிகாட்டல் தேவை என்பதால் செயல்முறையின் போது ஃப்ளோரோஸ்கோபி (Fluoroscopy) எனப்படும் சிறப்பு எக்ஸ்ரே இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஃப்ளோரோஸ்கோபி, மருத்துவர் ஊசியைச் செலுத்தும் இடத்தையும், அதன் பாதையையும் நிகழ்நேரத்தில் (Real-time) காண உதவுகிறது.

மேலும் ஊசி இலக்கு நரம்பு வேரை நெருங்கியதும், ஒரு சிறிய அளவு சாயம் (Contrast Dye) செலுத்தப்படும். இது நரம்பு வேரைச் சுற்றியுள்ள பகுதியைத் தெளிவாகக் காட்டவும், மருந்து சரியான இடத்தில் பரவுவதை உறுதி செய்யவும் உதவுகிறது.

சரியான இடம் உறுதி செய்யப்பட்டவுடன், இரண்டு முக்கிய மருந்துகளை உள்ளடக்கிய கலவை மெதுவாகச் செலுத்தப்படும்.

- கார்டிகோ ஸ்டீராய்டு(Corticosteroid) : இது சக்திவாய்ந்த அழற்சி எதிர்ப்பு மருந்து. இது நரம்பு வேர் அழற்சியைக் குறைத்து, அதன்மூலம் வலியை நீண்ட காலத்துக்குப் போக்க உதவுகிறது.

- மயக்க மருந்து (Local Anesthetic): இது வலி நிவாரணத்தை உடனடியாக வழங்குகிறது.

## சிகிச்சை காலம் மற்றும் பலன்

இந்த செயல்முறை பொதுவாக 15 முதல் 30 நிமிடங்கள் வரை மட்டுமே நீடிக்கும். சிகிச்சை முடிந்த பிறகு, நோயாளி சிறிது நேரம் கண்காணிப்பில் வைக்கப்படுவார். பல நோயாளிகள் ஊசி போட்ட சில மணி நேரங்களில் அல்லது நாட்களுக்குள் வலி நிவாரணத்தை உணர்கிறார்கள். கார்டிகோஸ்டீராய்டு மருந்து வேலை செய்யத் தொடங்கி, அழற்சி குறையும்போது, நிவாரணம் சில வாரங்கள் முதல் பல மாதங்கள் வரை நீடிக்கும். தேவைப்பட்டால், ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு சிகிச்சை மீண்டும் செய்யப்படலாம்.

## நன்மைகள்

- ஃப்ளோரோஸ்கோபி வழிகாட்டலுடன் இருப்பதால், மருந்து, பாதிக்கப்பட்ட இடத்திலேயே சரியாகச் செலுத்தப்படுகிறது.

- இது அறுவைசிகிச்சை இல்லாமல், நீண்டகாலத்துக்கு வலியிலிருந்து விடுவிக்கிறது.

- வலிக்குக் காரணமான நரம்பு வேரைத் துல்லியமாகக் கண்டறியவும் இது உதவுகிறது.

- சில நோயாளிகளுக்கு அறுவைசிகிச்சையின் தேவையைத் தள்ளிப்போடவோ அல்லது முற்றிலுமாகத் தவிர்க்கவோ உதவுகிறது.

## பக்கவிளைவுகள்

நரம்பு வேர் அடைப்பு பொதுவாகப் பாதுகாப்பானது என்றாலும், எந்தவொரு மருத்துவச் செயல்முறையையும் போலவே, இதில் சில அரிதான பக்கவிளைவுகளும் உள்ளன.

- ஊசி போட்ட இடத்தில் வலி அல்லது அசௌகரியம்.
- ரத்தக்கசிவு அல்லது காயம்.
- தொற்று ( அரிதானது).
- நரம்பு சேதம் (மிகவும் அரிதானது).
- மருந்துகளால் ஏற்படும் ஒவ்வாமை எதிர்வினைகள்.
- தற்காலிகமாக ரத்த சர்க்கரை அளவு அதிகரித்தல் (நீரிழிவு நோயாளிகளுக்கு).

சிகிச்சைக்கு முன், மருத்துவர் உங்கள் மருத்துவ வரலாறு, நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகள் மற்றும் ஒவ்வாமைகள் குறித்து முழுமையாக விசாரிப்பார். சிகிச்சைக்குப் பிறகு, உங்கள் மருத்துவர் வழங்கும் அனைத்து அறிவுறுத்தல்களையும் பின்பற்றுவது முக்கியம்.

சரியான நேரத்தில் செய்யப்படும் இந்த நுண்துளை நரம்பு சிகிச்சை, நோயாளியின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, வலி இல்லாத எதிர்காலத்துக்கு ஒரு சிறந்த தொடக்கமாக அமையும்.

**வடமலையான்**
**மருத்துவமனை(பி)லிமிடெட்**
Since 1957
மதுரை | திண்டுக்கல்



# பத்துமாசம் பாத்துக்குவோம் பத்திரமா பாத்துக்குவோம்...

## வடமலையான் மருத்துவமனை

பெருமையுடன் வழங்கும்
பேறுகாலத்திற்கான பிரத்யேகத் திட்டம்

**My mother**

**PACKAGE ரூ.30,000 /– மட்டுமே***

*நிபந்தனைக்கு உட்பட்டது*

செலுத்தி பெற்றிடுங்கள் முழுமையான பேறுகாலச் சிகிச்சை

(பேறுகாலம் உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து பிரசவ காலம் வரை)

**மதுரை**

9A, வல்லபாய்ரோடு, சொக்கிகுளம், மதுரை – 625002.
போன்: 0452 3545400 **(100 Lines)**, 4361022
For Emergency: 0452 250 1033
மேலும் விபரங்களுக்கு 89405 05551


**திண்டுக்கல்**

649 A/2, செட்டிநாயக்கன்பட்டி, அங்குநகர், திண்டுக்கல் – 624004.
போன்: 0451 3561000 **(100 Lines)**, 2461000
For Emergency: 0451 244 44 44
மேலும் விபரங்களுக்கு 73970 11222

Since 1957

# கண்களில் தோன்றும் காசநோய்!

டாக்டர் **S.இளம்பரிதி** MD (Pulmonary medicine)
*நுரையீரல் சிகிச்சை நிபுணர்*



காசநோய் (Tuberculosis – TB) என்பது பெரும்பாலும் நுரையீரலைப் பாதிக்கும் நோயாகவே அறியப்படுகிறது. ஆனால் இந்த நோய் உடலின் பல்வேறு பகுதிகளையும் தாக்கக்கூடியது. கண்களும் இந்த நோயால் பாதிக்கப்படலாம். கண் மங்கல், பார்வைக் குறைபாடு போன்ற எளிய பிரச்சினைகள்கூட, ஒரு பெரிய நோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம்.

மதுரையைச் சேர்ந்தவர் பிரேமா (72). இவருக்கு ஒரு கண் மங்கலாக வலியுடன் இருந்துள்ளது. இதனால் படிப்பதிலும், அன்றாட வேலைகளைச் செய்வதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அருகில் உள்ள கண் மருத்துவமனையை அணுகியுள்ளார். அங்கு அவரது கண்களைப் பரிசோதித்தபோது, கண்ணின் பின்புறத்தில் வீக்கம் இருப்பது தெரியவந்தது. இது ‘பின்புற கண் அழற்சி’ எனப்படும் கண்ணின் உள்ளே, பார்வைக்கு முக்கியமான பகுதிகளில் ஏற்படும் வீக்கமாகும். இது வைரஸ், பூஞ்சைத் தொற்றுகள், தன்னுடல் தாக்கு நோய் (Autoimmune disease) மற்றும் உடலின் பிற நோய்கள் அல்லது காசநோய் என பல்வேறு காரணங்களால் ஏற்படலாம்.

இவருக்கு காசநோய்க்கான வழக்கமான அறிகுறிகள் எதுவும் இல்லை. அதையடுத்து அவர் மதுரை வடமலையான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்.

அவருக்கு CT ஸ்கேன் செய்யப்பட்டதில் மார்பின் நடுப்பகுதியில் கட்டிகள் காணப்பட்டன. நடுப்பகுதியில் இருந்து பயாப்சி எடுப்பதற்கு ஆழமான அறுவைசிகிச்சை தேவைப்படும் என்பதால், பிற இடங்களில் பாதிப்பு உள்ளதா என்பதைக் கண்டறிய PET CT ஸ்கேன் செய்யப்பட்டது. இதில் கழுத்தில் உயிரியல் செயல்பாட்டுடன் கூடிய கட்டிகள் காணப்பட்டன. அவற்றில் பயாப்சி எடுக்கப்பட்டதில், அது காசநோய் என்பது உறுதியானது. இதையடுத்து அவருக்கு கண்ணில் ஏற்பட்டிருந்த அழற்சி, உடலுக்குள் மறைந்திருந்த காசநோயின் வெளிப்பாடாக இருந்தது தெரியவந்தது.

காசநோயால் நுரையீரல் மட்டுமன்றி கண்கள், மூளை, எலும்புகள், தோல், சிறுநீரகமும் பாதிக்கப்படலாம். கண்களில் ஏற்படும் காசநோய் முன்/பின் கண் அழற்சி, பார்வை நரம்பு பாதிப்பு, ரெட்டினா ரத்தக்குழாய் அழற்சி என பலவிதமாக இருக்கலாம்.


இதற்கான அறிகுறிகள் காசநோய்க்கான நேரடி அறிகுறிகளாக இல்லாமல் பிற நோய்களைப் போலவே இருக்கும் என்பதால், தவறான சிகிச்சை (உதாரணமாக ஸ்டீராய்டுகள் மட்டும்) கொடுக்கப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அப்போது நோய் மேலும் மோசமாகும் நிலை உண்டாகும்.

இந்தப் பெண்மணிக்கு, சரியான நேரத்தில் காசநோய் கண்டறியப்பட்டு, அதற்கான மருந்து சிகிச்சை உடனடியாக தொடங்கப்பட்டதால், தொடர்ந்து ஒரு சில வாரங்களிலேயே அவருக்கு கண் வீக்கம் குறைந்து, பார்வை மேம்பட்டது. இது சரியான சிகிச்சையின் பலனை உறுதிப்படுத்தியது.

காசநோய் நுரையீரலை மட்டும் அல்ல, கண்களையும் தாக்கும். சில நேரங்களில், கண் அழற்சியே காசநோயின் முதல் அறிகுறியாக இருக்கலாம். நுரையீரல் எக்ஸ்ரே சாதாரணமாக இருந்தாலும், உடலின் வேறு பகுதிகளில், கண்களில் காசநோய் மறைந்திருக்கலாம். இதை ஆரம்பநிலையில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும்போது பார்வையைப் பாதுகாக்க முடியும். இதற்கு காசநோய் குறித்த முழுமையான விழிப்புணர்வும், சரியான பரிசோதனையும் மிகவும் அவசியம்.

# வடமலையான் மருத்துவமனை
# நவீன இதய சிகிச்சைகள்

மதுரை வடமலையான் மருத்துவமனையில் பல தரப்பட்டஇதய நோய்களுக்கும், உலகத் தரத்தில் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.



GuidedAirFlowTheatre-ல் இதயசிகிச்சைசெய்யப்படும் தென் தமிழகத்தின் முதல் மருத்துவமனை வடமலையான் மருத்துவமனையாகும். சிகிச்சை அளிக்கும் மருத்துவ நிபுணரின் மூச்சுகூட, நோயாளியை பாதிக்காத வகையில் சிகிச்சை அறையில் இருந்து, காற்றை அப்புறப்படுத்தும் உலகின் நவீன தியேட்டர்கள் தான் Guided Air Flow Theatre ஆகும். வடமலையான் மருத்துவமனையில் உள்ள வடமலையான் ஹார்ட் பவுண்டேஷனில், சர்வதேச அனுபவம் பெற்ற இதய சிகிச்சை மருத்துவ நிபுணர்குழு தரமான சிகிச்சை அளிக்கிறது. இதய சிகிச்சை முடிந்த பின்னர், நோயாளி ஒருவாரத்தில் வழக்கமான பணியில் ஈடுபட முடியும்.

## பைபாஸ் சர்ஜரி செய்யப்படும் சிகிச்சைகள்

- இதய தமனி அடைப்புகளை சரி செய்யும் பைபாஸ் சர்ஜரி (தமனி என்பது இதயத்தில் இருந்து உடல் உறுப்புகளுக்கு சுத்த ரத்தம் கொண்டு செல்லும் குழாய்)
- மாற்று இதய வால்வு பொருத்துதல் சிகிச்சை
- இதய துவாரங்களை மூடுதல்
- பைபாஸ் சர்ஜரியை எந்த வயதிலும் செய்து கொள்ளலாம். இந்த சிகிச்சைக்குப் பின்னர் எந்தவித பயமும் இன்றி தாங்கள் மேற்கொண்ட பணிகளை தொடர்ந்து செய்ய முடியும்.
- இதய வால்வு சரி செய்தல் (இடது இதய பகுதியில் உள்ள வால்வு சரி செய்தல்)
- ரத்தக்குழாய் சுவர் பலவீனம் அடைந்து ஏற்படும் புடைத்தலை சரி செய்தல்.
- சுவாசப்பாதை சிகிச்சை
- சிக்கலான - இழந்து போன இதய ஓட்டத்தை சரி செய்தல்.
- இதய தமனி பைபாஸ் சிகிச்சை
- மிகச் சிறிய ஊடுருவல் இதய பைபாஸ் சர்ஜரி
- இதய செயல்பாட்டுடன் கூடிய சர்ஜரி
- பிறவி இதய குறைபாடு சரி செய்தல்.

Since 1957

**வடமலையான்**
மருத்துவமனை (பி) லிமிடெட்

PATIENT SAFETY & QUALITY OF CARE NABH ACCREDITED

### கிளைகள்

*9 ஏ, வல்லபாய் ரோடு,*
*சொக்கிகுளம்,*
*மதுரை - 625002.*
*போன் : 0452- 3545400, 2545400 (100 இணைப்புகள்)*

*649. ஏ/2.அங்குநகர்,*
*திண்டுக்கல் -624 004.*
*போன்: 0451 - 2461000, 0451-3561000*
*(100 இணைப்புகள்)*

Since 1957

# சைனஸ் பாதிப்பைக் கடுமையாக்கும் குளிர்காலம்!



குளிர்காலம் வந்தால் சிலருக்கு விடாத தலைவலி மற்றும் தும்மல் படுத்தி எடுத்துவிடும். தூசி இருக்கும் பகுதிக்குச் சென்றால், விடாது தும்மிக்கொண்டே இருப்பார்கள். கேட்டால், ''சைனஸ் பிரச்சினைங்க, சரியாகவே இல்ல'' எனக் கவலையோடு சொல்வார்கள். சைனஸ் பிரச்சினை ஏன் வருகிறது? அதை எப்படித் தவிர்ப்பது? சைனஸ் என்றால் என்ன? என்று பார்ப்போம்.

● டாக்டர் **ஜெயேந்திரன் சுப்பிரமணியம்** MS,DNB (ENT)
*காது, மூக்கு, தொண்டை நிபுணர், திண்டுக்கல்*

நமது மூக்கைச் சுற்றி, நான்கு காற்றுப் பைகள் உண்டு. மூளை, மூக்கு, கன்னம் மூக்கு, மூக்கு நெற்றி இணையும் இடம், கண்கள் மற்றும் மூக்குக்கு இடைப்பட்ட பகுதிகளில் இந்த காற்றுப் பைகள் அமைந்திருக்கின்றன. இந்த காற்றுப் பைகள், நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனை குறிப்பிட்ட வெப்பநிலையில் நுரையீரலுக்கு எடுத்துச் செல்ல உதவுகின்றன. இந்த காற்றுப் பைகளே சைனஸ் பகுதி என அழைக்கப்படுகின்றன.

## சைனஸ் பிரச்சினை எப்படி வருகிறது?

சைனஸ் பகுதியில் ஒரு திரவம் சுரந்து, நமது மூக்கில் உள்ள சளிச் சவ்வுக்கு (Mucous membrane) வரும். இந்த சளிச் சவ்வுதான், நாம் சுவாசிக்கும் வெப்பமான காற்றை ஈரப்படுத்தி, சைனஸ் பகுதிக்கு அனுப்புகிறது. சைனஸ் பகுதியில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், திரவம் காற்றுப் பையிலேயே தங்கிவிடும். இதன் காரணமாக பல பாதிப்புகள் முகத்தில் ஏற்படக்கூடும். சைனஸ் பகுதியில் ஏற்படும் இந்தப் பிரச்சினைக்கு 'சைனசிட்டிஸ்' (Sinusitis) என்று பெயர்.

மூக்குத் துவாரத்தைப் பிரிக்கும் எலும்பு வளைவாக இருப்பதன் காரணமாகவும், சைனஸ் பகுதிக்கு அருகில் இருக்கும் எலும்பின் முறையற்ற வளர்ச்சியாலும், மூக்குப் பகுதிக்குள் 'பாலிப்' (Polyp) எனப்படும் மூக்குச் சதை வளர்ச்சி காரணமாகவும், சைனஸ் பிரச்சினை வருகிறது. பெரும்பாலும் சுற்றுச்சூழல் மாசு, அலர்ஜி காரணமாக சைனஸ் பிரச்சினை வருகிறது.

## சைனசிடிஸ் அறிகுறிகள் என்ன?

* கன்னம், நெற்றிப் பகுதியில் கடுமையான வலி ஏற்படும்.

* தலையைக் கீழே கவிழ்த்தால், தாங்க முடியாத தலைவலி இருக்கும்.

* அடர்த்தியான மஞ்சள் நிறத்தில் சளி வெளியேறும், சிலருக்கு சளி சிந்தும்போது, ரத்தமும்



புகைப்பழக்கத்தை நிறுத்த முடியவில்லையா?
புகைப்பழக்கத்திற்கு அடிமையாவது ஒரு நோய்
உங்களுக்கு தேவை அறிவுரை மட்டுமல்ல
சரியான மருந்து மற்றும் மருத்துவ ஆலோசனை
* நிக்கோட்டின் மாற்று சிகிச்சை
* பழக்கவழக்கத்தில் மாற்றம்
புகையினால் உடல் உறுப்புகள் பாதிப்படைந்துள்ளதா என அறிய
* Chest X-Ray
* PFT
* Treadmill
* Pulmonologist Consultation
1900/- ONLY
95665 91238
வடமலையான்
மருத்துவமனை (பி) லிமிடெட்
Since 1957
9A, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002. Ph:0452 3545400
77-80, சின்னகடை தெரு, தெற்குவாசல், மதுரை.625001. Ph:0452 4371000
649/A2, அங்கு நகர், திண்டுக்கல்-624001. Ph:0451 3561000,



யூக்லிப்டஸ் எண்ணெயைக் கலந்து, நீராவி பிடிக்கலாம், தைலம் தடவலாம். தும்மலைத் தடுக்க, மருத்துவர் ஆலோசனைப்படி மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம். மருத்துவர் பரிந்துரையின்பேரில், குறிப்பிட்ட காலத்துக்கு ஸ்டீராய்டு கலந்த ஸ்ப்ரே பயன்படுத்தலாம். காது, மூக்கு, தொண்டை மருத்துவர் பரிந்துரை இல்லாமல் ஸ்டீராய்டு கலந்த சொட்டு மருந்துகளை மூக்கினுள் விடவேண்டாம்.

சேர்ந்து வரும். சளி, கடுமையான நாற்றத்துடன் இருக்கும்.

* மூக்கைத் தொட்டாலே, கடுமையான வலி ஏற்படும்.

* இரவு நேரத்தில் இருமல் வரும். காலையில் எழுந்தவுடன் தொடர்ச்சியாகத் தும்மல் வரும்.

* பல்வலி, காதுவலி ஏற்படும். வாசனை, சுவை உணர்வு குறையும்.

* காய்ச்சல் வரலாம், உடல் சோர்வாக இருக்கும். வேலையில் கவனம் செலுத்த முடியாது.

### சைனஸ் பிரச்சினை உள்ளவர்கள் என்ன செய்யவேண்டும்?

யூக்லிப்டஸ் எண்ணெயைக் கலந்து, நீராவி பிடிக்கலாம், தைலம் தடவலாம். தும்மலைத் தடுக்க, மருத்துவர் ஆலோசனைப்படி மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம். மருத்துவர் பரிந்துரையின்பேரில், குறிப்பிட்ட காலத்துக்கு ஸ்டீராய்டு கலந்த ஸ்ப்ரே பயன்படுத்தலாம். காது, மூக்கு, தொண்டை மருத்துவர் பரிந்துரை இல்லாமல் ஸ்டீராய்டு கலந்த சொட்டு மருந்துகளை மூக்கினுள் விடவேண்டாம்.

இந்த சிகிச்சைமுறைகளில் சரியாகவில்லை எனில், எண்டோஸ்கோப்பி சிகிச்சை மூலமாக சைனஸ் பகுதியில் உள்ள திரவம் அப்புறப்படுத்தப்படும் (Functional Endoscopic Sinus Surgery). எலும்புப் பகுதி, சதைப் பகுதியில் பிரச்சினை இருந்தால் காது, மூக்கு, தொண்டை மருத்துவர் ஆலோசனைப்படி அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம். ஆனால், உடனே பலன் இருக்காது. தொடர்ந்து ஓரிரு வருடங்களுக்கு, மருத்துவர் பரிந்துரைப்படி மாத்திரை மருந்துகளைச் சாப்பிடவேண்டும்.

வடமலையான் மருத்துவமனை வழங்கும்

# சுகந்தம்

## மனை வரும் மருத்துவம்

(வடமலையான் மருத்துவமனையின் ஓர் அங்கம்)



- மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய உங்கள் வீடு தேடி வருகிறது வடமலையான் மருத்துவமனையின் "சுகந்தம்" - திட்டம் உங்கள் குடும்பத்தினரின் நலத்திற்காக பதிவு செய்து கொள்ளுங்கள்

- நீங்கள் அழைத்தவுடன் உடனடியாக உங்கள் இல்லம் தேடி வருகிறது வடமலையான் மருத்துவமனையின் "சுகந்தம்" - திட்டம்

சேவை பற்றிய விரிவான விளக்கங்கள் அறிய எங்கள் சுகந்தம், ஹோம் ஹெல்த் கேர் அலுவலகத்தை அணுகவும்

### சிறப்பம்சங்கள்:

- உடனடி பிரத்யேக சேவை
- மருத்துவர், செவிலியர், டெக்னிஷியன்கள் மருத்துவ சேவை புரிய உங்கள் இல்லம் வருவர்
- இல்ல செவிலியர் சேவை
- இல்லத்திலேயே உடல் பரிசோதனை
- மருந்தகம் மற்றும் ஆய்வக பரிசோதனை சேவை
- ஆம்புலன்ஸ் சேவை
- உறைவிட சேவை

மேற்கூறிய சேவைகள், அதற்குரிய கட்டணத்துடன் இத்திட்டத்தில் பதிவு செய்பவர்களுக்கு அளிக்கப்படும்.

**82205 87555**
மதுரை
9A, வல்லபாய்ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002
Ph.0452-3545400, 2545400(100 Lines),
For Emergency- 0452 - 250 1033

**99949 91787**
திண்டுக்கல்
649 A/2, அங்கு நகர், திண்டுக்கல்-624004.
Ph:. 0451-2461000, 3561000 (100 Lines)
For Emergency- 0451 - 244 44 44




Since 1957
வடமலையான்
மருத்துவமனை(பி)லிமிடெட்

# குரல்வளை நாணில் இருந்த கட்டி அகற்றம்!



அறுவைசிகிச்சைக்குப் முன்

அறுவைசிகிச்சைக்குப் பின்

குரல்வளை நாணில் கட்டி ஏற்பட்டு குரல் மாற்றத்தால் அவதிப்பட்டுவந்த இளைஞர், வடமலையான் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட எண்டோஸ்கோபி சிகிச்சைக்குப்பின் நலமடைந்தார்.

பரமக்குடியைச் சேர்ந்தவர் அரவிந்த் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). 23 வயதுடைய இவருக்கு கடந்த 3 மாதங்களாக குரலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. உணவை விழுங்குவதிலும் சிரமம் உண்டானது. அதையடுத்து அவர் மதுரை வடமலையான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்.

அவரை காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.பாப்புநாதன் MS (DLO) பரிசோதித்தார். அதில் அவருக்கு குரல்வளை நாணின் இடதுபுறத்தில் கட்டி (Haemorrhagic polyp) இருப்பது தெரியவந்தது. அதையடுத்து உடனடியாக எண்டோஸ்கோபி சிகிச்சை மேற்கொண்டு கட்டியை அகற்ற முடிவுசெய்யப்பட்டது.

**மயக்கவியல் நிபுணர் டாக்டர் டி.விக்னேஷ் DA உதவியுடன் காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள் டாக்டர் வி.பாப்புநாதன், டாக்டர் பி.நவநீதன் MS (ENT)** ஆகியோர் எண்டோஸ்கோபி மூலம் Microlaryngeal procedure மேற்கொண்டு நோயாளியின் குரல்வளை நாணின் இடதுபுறத்தில் இருந்த கட்டியை அகற்றினர். கட்டியின் மாதிரி எடுக்கப்பட்டு, பயாப்சி பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதில் அது ஒவ்வாமையால் உண்டாகும் சாதாரணக் கட்டி என்பது உறுதியானது. அறுவை சிகிச்சைக்குப்பின் நோயாளி நலமடைந்தார். அவருக்கு இருந்த குரல் மாற்றம் சீரானது. தொடர்ந்து 15 தினங்களுக்கு குரல் ஓய்வுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

இதுகுறித்து டாக்டர் பாப்புநாதன் கூறுகையில், "Hemorrhagic Polyp என்பது குரல்வளையில் ரத்தக்குமிழி போல உருவாகும் ஒரு பாலிப். இது பெரும்பாலும் குரலை திடீரென அதிகமாக பயன்படுத்துவதால் அல்லது குரல் மீது அதிக அழுத்தம் கொடுப்பதால் ஏற்படும்" என்றார்.

# நமது வடமலையான் மருத்துவமனையில் நோய்களைத் துல்லியமாகக் கண்டறியும் கருவிகள்



## பெட் ஸ்கேன் (PET SCAN)

தென்தமிழகத்திலேயே முதன்முறையாக மதுரை வடமலையான் மருத்துவமனையில் பெட் ஸ்கேன் கருவி நிறுவப்பட்டுள்ளது. இக் கருவி மூலம் பல்வேறு புற்றுநோய்களை ஆரம்ப நிலையிலேயே துல்லியமாகக் கண்டறிய முடியும். புற்றுநோய் பாதித்தவர்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சையை எந்த அளவில் அளிக்கலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு இக்கருவி பெரிதும் உதவுகிறது.

இதயநோய் மருத்துவத்திலும் பெட் ஸ்கேன் மிக முக்கிய பங்காற்றுகிறது. இதயத்தசைகள் உயிரோட்டத்துடன் உள்ளதா என்பதையும் இதயத்திலுள்ள ரத்தத்தின் நிலையைக் கண்டறியவும் பயன்படுகிறது.

இதயத்தின் ரத்தஓட்டத்தில் குறைபாடு ஏற்படும்போது எதிர்காலத்தில் மாரடைப்பு உருவாகலாம். பெட் ஸ்கேன் கருவி மூலம் சோதனை செய்வதன் மூலம் இப் பாதிப்பு வராமல் தவிர்க்கலாம். ஆஞ்சியோபிளாஸ்டி, பை-பாஸ் அறுவை சிகிச்சை செய்த பின்னர் அந்த நபர் ஆரோக்கியமாக வாழும் நிலையைக் கணக்கிடவும் பெட் ஸ்கேன் பெரிதும் உதவுகிறது. நரம்பியல் மருத்துவத்தில் எஃப்.டி.ஜி. பெட் ஸ்கேன் கருவி பயன்படுத்தப்படுகிறது.

ஞாபகமறதி நோயைக் (Dementia) கண்டறிவதற்கும் மற்றும் பல்வேறு நோய் நிலைகளைக் கண்டறிவதற்கும் இக் கருவி உதவுகிறது. வலிப்பு ஏற்படுவதற்கான மூளையின் பகுதியை அடையாளப்படுத்துவதில் பெட் ஸ்கேன் முக்கியப் பங்காற்றுகிறது.

## லினாக் ரேபிட் ஆர்க் (LINAC RAPIDARC)

லினாக் ரேபிட் ஆர்க் என்பது அதிநவீன கதிர்வீச்சு சிகிச்சை முறையாகும். இந்த கதிர்வீச்சுக் கருவி மிகத் துல்லியமாக செயல்படுவதால் புற்றுநோய் கட்டியை முழுமையாக சென்றடைகிறது. இந்தக் கதிர்வீச்சுக் கருவியைப் பயன்படுத்துவதால் இயல்பாக உள்ள உடல் உறுப்புகளில் ஏற்படும் பக்கவிளைவுகள் மிகக் குறைவாகவே இருக்கும்.

இக்கருவி மூலம் வாய், தொண்டை, மார்பகம், நுரையீரல் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய்கள், மூளைக் கட்டிகள் என அனைத்துவகையான புற்றுநோய்களுக்கும் சிகிச்சை அளிக்கலாம். மக்களின் சேவைக்காக லினாக் கருவி நமது வடமலையான் மருத்துவமனை புற்றுநோய் மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## பிரேக்கி தெரபி (BRACHY THERAPY)

பிரேக்கி தெரபி உள்கதிர்வீச்சு சிகிச்சை முறை என்று அழைக்கப்படுகிறது. முக்கியமாக பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை மற்றும் கர்ப்பப்பை வாய் (Cervical cancer) புற்றுநோய்களை முற்றிலும் அழிக்க மிக அதிக அளவு கதிர்வீச்சு தேவைப்படும். இத்தகைய நோயாளிகளுக்கு முதலில் லினாக் ரேபிட் ஆர்க் கருவி மூலம் 5, 6 வாரங்களுக்கு வெளிக்கதிர்வீச்சு அளிக்கப்பட்டு பின்னர் 2, 3 முறை ஹெச்.டி.ஆர். பிரேக்கி தெரபி கருவி மூலம் நேரடியாக கர்ப்பப்பையின் உள்ளேயே எக்ஸ்ரே கதிர்வீச்சு செலுத்தப்படும். சில நிமிடங்களிலேயே சிகிச்சை முடிந்து உடனடியாக வீடு திரும்பலாம். இந்த சிகிச்சை முறையில் எந்தவித வலியோ, பயமோ கிடையாது. இந்த அதிநவீன High Dose Rate (HDR) பிரேக்கி தெரபி கருவியும் வடமலையான் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

## எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI SCAN)


தீவிரமான நோய்களைக் கண்டறிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உதவுகிறது. காந்த அதிர்வு அலை வரைவு அல்லது எம்.ஆர்.ஐ. (Magnetic Resonance Imaging) ஸ்கேன் என்பது சக்தி வாய்ந்த காந்தத்தின் உதவியுடன் கம்ப்யூட்டர் மூலம் நோயின் பாதிப்பைத் துல்லியமாகத் திரையில் காண்பதாகும். எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் மூளை, தண்டுவடம், நரம்பு, எலும்பு சம்பந்தமான நோய்களின் தன்மையைக் கண்டறிய முடியும்.

கல்லீரல், கணையம், சிறுநீரகம் அல்லது சிறுநீர்ப்பை கட்டிகள் மற்றும் கர்ப்பப்பை கட்டிகளையும் துல்லியமாகக் கண்டுபிடிக்க முடிகிறது. எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் மூளைக்கட்டி, மூட்டு வலிகள் மற்றும் மாரடைப்பு போன்ற பெரும் நோய்களையும் கண்டுபிடிக்க முடியும். பேஸ்மேக்கர் எனும் இதய முடுக்கி மற்றும்

(Metalic implants) எனும் மாற்று சிகிச்சைகளை காதிலோ, மூளையிலோ செய்திருந்தால் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கண்டிப்பாக செய்யக் கூடாது. அதை மறைக்கவும் கூடாது. கர்ப்பமடைந்த பெண்கள் 3 மாதங்களுக்குப் பிறகு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் செய்யலாம். அதற்கு முன்னர் செய்யக்கூடாது. அறுவைசிகிச்சை செய்வதற்கு முன்னரும், புற்றுநோய் வளர்ச்சி பற்றிய வரைபடங்களை அறிவதற்கும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உதவுகிறது.

Since 1957

## காமா கேமரா (GAMMA CAMERA)



### Cardiac Studies

இதயத்தசைக்கான ரத்தஓட்டத் தடை அல்லது குறைபாட்டினால் ஏற்படும் பாதிப்பின் அளவைக் கண்டறியவும் (STRESS MPI) இதயத்தின் ரத்த உந்துதல் திறனைக் (MUGA) கண்டறியவும் அணுக்கரு மருத்துவம் பயன்படுகிறது. இதயத்தசை ரத்தஓட்டத்தை இழந்தாலும் உயிர்ப்புடன் இருக்கிறதா என்று அறிய Cardiac PET பயன்படுகிறது. இந்தப் பரிசோதனைகளின் மூலம் இதயத்துக்கான ரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பை நீக்கும் அறுவைசிகிச்சைக்கான பலன் எந்த அளவு பயனளிக்கும் என்பதை தெளிவுற அறிந்து அதற்கேற்ப சிகிச்சைக்கான முடிவு எடுக்கப்படும்.

### Renal Scan

சிறுநீரகங்களின் திறனையும் (GFR by DTPA) தொற்று மற்றும் வேறு நோய்களால் ஏற்படும் பாதிப்புகளையும் (DMSA), சிறுநீர்ப் பாதையில் அடைப்பு இருப்பினும், சிறுநீர் எதிர் திசையில் பயணித்தாலும் (VUR) அணுக்கரு மருத்துவம் மூலம் கண்டறியலாம்.

### Brain

வலிப்பு நோய் மூளையின் எந்த பகுதியில் உருவாகிறது என்பதையும் (MECD BRAIN SPECT) ஞாபக மறதி நோயான Dementia&வின் காரணத்தையும் வகையையும் PET மற்றும் TRODat Scan மூலம் கண்டறியலாம். Prostate புற்றுநோய் பரவலைக் கண்டறியவும் (PSMA PET CT) அறுவைசிகிச்சை மற்றும் வேறு மருத்துவ முறைகள் பயன்படாத நிலையில் அதற்கான பீட்டா கதிரியக்க மருத்துவமும் (Lu177 PSMA therapy) அளிக்கப்படுகிறது.

அறுவைசிகிச்சை செய்ய இயலாத கல்லீரல் புற்றுநோய்க்கு TARE எனப்படும் பீட்டா கதிரியக்கம் அணுக்கரு மருத்துவத்தில் அளிக்கப்படுகிறது. இந்த அணுக்கரு மருத்துவக் கருவி மூலம் நோயின் நிலையைத் துல்லியமாகக் கண்டறிந்து மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதால் நோயாளிகள் நல்ல குணமடைவார்கள். உடல் உறுப்புகளின் நிலையைக் கண்டறிவதற்கும் காமா கேமரா உதவுகிறது.

## மேமோகிராஃபி (MAMMOGRAPHY)

மேமோகிராம் எக்ஸ்ரே மார்பகத்திலுள்ள நீர்க்கட்டிகள், மார்பகத் திசுக்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிய உதவுகிறது. இந்த எக்ஸ்ரேவில் மிகக் குறைந்த அளவே கதிர்வீச்சுகள் பயன்படுத்தப்படுகின்றன. மார்பக வீக்கம், மார்பகக் காம்பு தடிமானகுதல், மார்பகக் கட்டிகள், மார்பகத் தோலில் எரிச்சல், மார்பகக் காம்புகளிலிருந்து ரத்தம் அல்லது நீர் வெளியேறுதல், அக்குள் பகுதியில் ரத்தக்கட்டிகள் தோன்றுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படும்போது இந்த மேமோகிராம் கருவி மூலம் பரிசோதனை செய்யப்படுகிறது. மேமோகிராம் பரிசோதனை செய்யும்போது புற்றுநோய்க்கான அறிகுறிகள் இருந்தால் திசுப் பரிசோதனை செய்யவேண்டும்.

## 160 Slice UCT 780 CT Scan

தென்தமிழகத்தில் முதன்முறையாக அதிநவீன தொழில்நுட்பத்துடன்கூடிய 160 Slice UCT 780 CT ஸ்கேன் மதுரை வடமலையான் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஸ்கேன் இயந்திரம் மருத்துவத் துறையில் மிகப்பெரிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. இது வேகமான, துல்லியமான, குறைந்த கதிர்வீச்சு கொண்ட பல்துறை நோயறிதலுக்கான சிறந்த தேர்வாகும். இதன் முக்கிய அம்சங்கள்:

**குறைந்த கதிர்வீச்சு:** Z-Detector தொழில்நுட்பத்தின் மூலம் நோயாளிக்கு மிகக் குறைந்த கதிர்வீச்சு அளவில் தரமான படங்களைப் பெறமுடியும்.

**அதிவேக ஸ்கேன்:** 0.3 வினாடி சுழற்சி வேகத்தில் இதயம் போன்ற இயக்கமுள்ள உறுப்புகளையும் தெளிவாக பதிவுசெய்ய முடியும்.

**ஏ.ஐ. தொழில்நுட்பம் இணைப்பு:** uAI Vision 3D camera மற்றும் DELTA deep learning algorithm வசதிகள் உள்ளதால் ஸ்கேன் எடுக்கும்போது இயந்திரத்தில் இருந்து வெளிப்படும் சத்தம் குறைக்கப்படுகிறது. ஏ.ஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கரோனரி தமனி கால்சியத்தின் அளவு மற்றும் இதய அறையின் பண்புகளைக் கணக்கிடுதவன் மூலம், மாரடைப்பு உள்ளிட்ட இதயநோய்க்கான வாய்ப்புகள் இருந்தால் அவற்றை ஆரம்பநிலையிலேயே குறைந்த செலவில் கண்டறியமுடியும்.

**முப்பரிமாண (3டி) படங்கள்:** இதயம், மூளை, நுரையீரல், வயிறு போன்ற உறுப்புகளுக்கான 3டி ஸ்கேன் மூலம் அறுவைசிகிச்சைக்கு முன் துல்லியமான திட்டமிடல் சாத்தியம்.

**சாத்தியமாகும் உடனடி சிகிச்சை:** உடல்நலக் குறைபாடுகளை ஆரம்பநிலையிலேயே கண்டறியமுடிவதால் பக்கவாதம், விபத்து மற்றும் அவசரநிலை நோய்களுக்கு உடனடியாகத் தீர்வுகாண முடிகிறது.


**விர்ட்சுவல் பிரான்கோஸ்கோபி மற்றும் கோலனோஸ்கோபி:** சி.டி. ஸ்கேன் மூலம் நிகழ்நேரத்தில் நுரையீரல் மற்றும் குடலுக்குள் பார்வையிடும் திறன் நோயாளிக்கு மிகவும் எளிதான மற்றும் பாதுகாப்பான தேர்வாக அமைகிறது. மேலும், ஒரே ஸ்கேனில் பல உறுப்புகளின் நிலையை முப்பரிமாணத் தோற்றத்தில் அறியமுடிகிறது.

மேற்கண்ட பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைகளைப் பற்றிய தகவல்களை கீழ்க்கண்ட பிரிவு ஒருங்கிணைப்பாளர்களை செல்பேசியில் தொடர்புகொண்டு அறியலாம்.

புற்றுநோய்ப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் – 73977 75101

பெட் ஸ்கேன் முன்பதிவு ஒருங்கிணைப்பாளர் – 73977 44711

Since 1957



MEDIKA BAZAAR
UNITED IMAGING
Vadamalayan Hospitals (P) Ltd.
Since 1957
Unlock excellence in cardiac scans with the uCT 780
Revolutionize diagnostics with cutting-edge imaging technology.
Launching 1st in Tamilnadu*
160 Slice CT
uCT 780
Precision. Accelerated
*out side Chennai
0. 35s Rotation Speed*
Improve the temporal resolution for cardiac imaging.
80kW Max Generator Power*
Clearly visualize challenging patient anatomy.
Fast and Predictive Applications
Automated post-processing to make diagnosis convenient.
Spectral Imaging
Enhanced Diagnostic Accuracy through Detailed Tissue Characterization
Vadamalayan Hospitals
15/1, Jawahar Road, Chokkikulam, Madurai-625 002.
www.vadamalayan.org

# மூட்டுவலிக்கு மினிமலி இன்வேசிவ் முறை

டாக்டர் **M. நரசிம்மன்** MD, FIVR
*ஊசிதுளை கதிரியக்க சிகிச்சை நிபுணர்*

மூட்டுத் தேய்மானத்தால் (Osteoarthritis) பாதிக்கப்பட்டு அறுவைசிகிச்சை செய்ய இயலாத நிலையில் உள்ள நோயாளிகளுக்கு Genicular Artery Embolisation (GAE) மிகச்சிறந்த மாற்று சிகிச்சையாக உள்ளது. இது ஒரு குறைந்தபட்ச ஊடுருவும் செயல்முறை (Non surgical minimally invasive procedure) ஆகும்.

ஆஸ்டியோஆத்ரைட்டீஸ் எனப்படும் மூட்டுத் தேய்மானப் பிரச்சினை, உலகளவில் அதிகம் காணப்படும் மூட்டு நோய்களில் ஒன்றாகும். குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் இது அதிகமாகக் காணப்படுகிறது. தினசரி நடப்பது, படிக்கட்டுகள் ஏறுவது, நீண்ட நேரம் நிற்பது போன்ற எளிய செயல்களும் வலியால் சிரமமாக மாறுகின்றன. இதனால் நோயாளியின் வாழ்க்கைத் தரம் குறைந்து, மனஅழுத்தமும் அதிகரிக்கிறது.

இப்பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு மருந்துகள், உடலியக்கப் பயிற்சி, ஊசி போன்ற பாரம்பரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இவை பெரும்பாலும் தற்காலிக நிவாரணம் மட்டுமே தருகின்றன. வலியின் தீவிரத்தைப் பொறுத்து சிலருக்கு மூட்டுமாற்று அறுவைசிகிச்சை (Joint replacement surgery) பரிந்துரைக்கப்படுகிறது.

ஆனால் அறுவைசிகிச்சை எல்லோருக்கும் சாத்தியப்படுவதில்லை. இன்னும் சிலர் அறுவை சிகிச்சைக்கான செலவு, அதன்பின்னர் தேவைப்படும் நீண்டகால ஓய்வு மற்றும் அதன் பக்கவிளைவுகளை எண்ணி வலியுடனே வாழத் தயாராகின்றனர்.

இதுபோன்ற நிலையில் உள்ளவர்களுக்கு நவீன முறையிலான Genicular Artery Embolisation (GAE) சிறந்த மாற்று வழியாக உள்ளது. மிகச் சிறிய கத்தீட்டர் மூலம் மூட்டுகளில் உள்ள அசாதாரண ரத்தக்குழாய்களை அடைப்பதால் வலி குறைகிறது. எக்ஸ்ரே வழிகாட்டுதலுடன், சிறிய மருந்துத் துகள்கள் (medical particles) ரத்த நாளங்களில் செலுத்தப்படுகின்றன. இதன்மூலம் மூட்டு இணைப்புகளில் ஏற்படும் வீக்கம் மற்றும் வலி குறைக்கப்படுகின்றன.




இச்செயல்முறையின்போது தொடை அல்லது மணிக்கட்டுப் பகுதி ஊசி மூலம் மரத்துப்போகச் செய்யப்படுகிறது. அங்கு மிகச்சிறிய துளையிடப்பட்டு, அந்தத் துளை வழியாக கத்தீட்டர் செலுத்தப்பட்டு ரத்தஓட்டம் அதிகம் உள்ள ரத்தக்குழாய்கள் மருந்துத் துகள்கள் மூலம் அடைக்கப்படுகின்றன.

இது மிக எளிய செயல்முறையாக இருப்பதால் சிகிச்சைக்குப்பின் நோயாளி மருத்துவமனையில் தங்கும் நாள்கள் குறைவு. சிகிச்சைக்கு பின் பெரும்பாலானோர் 24 முதல் 48 மணி நேரத்திற்குள் வலி குறைவதை உணர்கிறார்கள். செயல்முறையில் எந்தவொரு பக்கவிளைவும் கிடையாது. சிகிச்சைக்கான செலவும் மிகவும் குறைவு.

மதுரை, திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனைகளில் இச்செயல்முறை அனுபவமிக்க மருத்துவர்களால் மிகச்சிறந்த முறையில் செய்யப்படுகின்றன.

மூட்டுத்தேய்மானத்தால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்ய இயலாத, விரும்பாத நோயாளிகள் எங்கள் மருத்துவமனையின் இந்த நவீன மருத்துவ வசதியைப் பயன்படுத்தி நலம்பெறலாம்.

முதலமைச்சர் மருத்துவக்காப்பீடு அட்டை உள்ளவர்களுக்கு

# வடமலையான் ஒருங்கிணைந்த புற்றுநோய் மையத்தில் சிகிச்சை வசதி



- தமிழக முதலமைச்சர் மருத்துவக்காப்பீடு அட்டை உள்ளவர்களுக்கு வடமலையான் ஒருங்கிணைந்த புற்றுநோய் மையத்தில் சிகிச்சை வசதி உள்ளது.
- புற்றுநோய் நிலையை அறிய உதவும் அணுக்கரு மருத்துவம் சார்ந்த பெட் ஸ்கேன் பரிசோதனையையும் முதலமைச்சர் மருத்துவ காப்பீடு அட்டை உள்ளவர்கள் பெறலாம்.
- புற்றுநோய் பாதிப்பில் இருந்து விடுபடுவதற்கான அதிநவீன கதிர்வீச்சு சிகிச்சை (ரேடியோதெரபி) முதலமைச்சர் மருத்துவக் காப்பீடு அட்டை உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகிறது.
- முதலமைச்சர் மருத்துவக்காப்பீடு அட்டை உள்ளவர்களுக்கு பரிசோதனை, சிகிச்சை வசதியுடன் புற்றுநோய் மருத்துவரின் ஆலோசனையும் வழங்கப்படுகிறது.




மேலும் விவரங்களுக்கு வடமலையான் ஒருங்கிணைந்த புற்றுநோய் மைய மதுரை ஒருங்கிணைப்பாளரை 73977 75101 என்ற எண்ணிலும்

திண்டுக்கல் ஒருங்கிணைப்பாளரை 99432 66499 என்ற எண்ணிலும்

காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

Since 1957

NABH ACCREDITED

## வடமலையான் மருத்துவமனை (பி) லிமிடெட்

9-A, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம்,
மதுரை - 2. Ph: 0452-3545400, 2545400,
4361022/33, 7708069911 Fax: 0452-2522225

649/A2, அங்கு நகர், செட்டிநாயக்கன்பட்டி,
கிராம சாலை, திண்டுக்கல்–624004.
0451–3561000, 99432 66499.

enquires@vadamalayan.org | www.vadamalayan.org



# குழப்பமான நோயறிதலுக்குப் பின்
# குடல் புற்றுநோய்க்குத் தீர்வு!


● டாக்டர் **R. சோனியா** DMRD, DNBRD
*கதிரியக்க நிபுணர்*


65 வயது நபருக்கு குழப்பமான நோயறிதலுக்கு பின் மதுரை வடமலையான் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சி.டி. ஸ்கேனில் குடல் புற்றுநோய் உறுதிசெய்யப்பட்டு, அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சைக்குப்பின் நோயாளி நலமுடன் உள்ளார்.

மதுரையைச் சேர்ந்தவர் குமரேசன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவருக்கு தொடர்ந்து ஒரு மாதமாக வயிற்றுவலி இருந்துள்ளது. அதையடுத்து அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். அங்கு அவருக்கு சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டபோது, இடதுபுறப் பெருங்குடலில் புற்றுநோய் இருப்பதாகத் தெரியவந்தது.

அதைத்தொடர்ந்து, கோலனோஸ்கோபி செய்யப்பட்டது. அதில் ஒரு சிறிய கட்டி இருப்பது உறுதிசெய்யப்பட்டு, அக்கட்டியின் ஒரு பகுதி பயாப்சிக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அந்தப் பரிசோதனை முடிவில், அது புற்றுநோய் அல்ல என்று வந்ததால் குழப்பம் ஏற்பட்டது.

10 நாட்களுக்குப் பிறகு, நோயாளிக்கு மீண்டும் ஒரு கோலனோஸ்கோபி செய்யப்பட்டது. இந்த முறை, இடதுபுறப் பெருங்குடலில் இருந்த கட்டியுடன், வலதுபுறப் பெருங்குடலிலும் வேறொரு கட்டி இருப்பது கண்டறியப்பட்டது.

இரண்டு கட்டிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட திசுக்கள் பயாப்சி செய்யப்பட்டபோது, வலதுபுறக் குடலில் இருந்ததுதான் உண்மையான புற்றுநோய்க் கட்டி என்பது உறுதியானது. ஸ்கேன் மற்றும் பயாப்சி முடிவுகளில் ஏற்பட்ட முரண்பாடுகளால், குடும்பத்தினர் அவரை மதுரை வடமலையான் மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் எடுக்க அழைத்துவந்தனர்.

இங்கு எடுக்கப்பட்ட ஸ்கேனில்(**படம்**),




**சொக்கிகுளம்**
9–ஏ, வல்லபாய் ரோடு,
மதுரை–2.
போன்: 0452–3545400,
2545400, 77080 69933.

**தெற்குவாசல்**
77/ 80, சின்னக்கடைத் தெரு,
மதுரை–1.
போன்: 0452–4371000,
4371011, 97900 32082.

**திண்டுக்கல்**
649/A2, அங்கு நகர்,
திண்டுக்கல்–624 004.
போன்: 0451–3561000,
99432 66499.

**ஆத்திகுளம்**
கடை எண்– 37,
புதூர் வண்டிப்பாதை ரோடு,
மதுரை–7.
செல்போன்: 95970 57222

**கூடல்நகர்**
அஞ்சல் நகர்,
மதுரை–18.
செல்போன்: 97900 32086.

**தெற்குவெளி வீதி**
தெற்குவெளி வீதி, மதுரை–1.
போன்: 0452 4240005,
செல்போன்: 80567 44422.

**எஸ்.எஸ்.காலனி**
சக்திவேலன் முதல் தெரு,
மதுரை–16.
போன் 0452 4200042,
செல்போன்: 80567 33133.

**அண்ணா நகர்**
எச்.ஐ.ஜி. காலனி,
மதுரை–20.போன்: 4390380,
செல்போன்: 97900 32087.

**கிருஷ்ணாபுரம் காலனி**
ரத்தினசாமி நாடார் சாலை,
மதுரை–2.
போன்: 0452 4390370,
செல்போன்: 96003 82244.

**ஜெய்ஹிந்த்புரம்**
ஜீவா நகர் முதல் தெரு,
மதுரை–11.போன்: 4390290,
செல்போன்: 96009 32080.

**ஏர்போர்ட்**
கமர்ஷியல் காம்ப்ளக்ஸ்,
மதுரை–22.
போன்: 0452 2690611,
செல்போன்: 97900 32085.

**ஆண்டாள்புரம்**
டி.பி.கே.ரோடு, மதுரை–3.
போன்: 0452 4365020,
செல்போன்: 82202 34666.

**திருமங்கலம்**
முனிசிப் கோர்ட் ரோடு,
திருமங்கலம்– 6.
போன்: 04549 400022,
செல்போன்: 80567 77339.

**கே.புதூர்**
அழகர்கோவில் ரோடு, புதூர்
பஸ் ஸ்டாண்டு, மதுரை–7.
போன்: 95979 95500.

**மூன்றுமாவடி**
எல்.பி.என். காம்பிளக்ஸ்,
மதுரை–7. செல்போன்: 95007 15500.

**பின்.என்.டி. நகர்**
அபிஜித் பிளாசா, பார்க் டவுன்
பஸ் நிலையம், மதுரை–17.
போன்: 0452 4367783,
செல்போன்: 80567 55566.

**கருப்பாயூரணி**
பாரதிபுரம், மதுரை –20.
செல்போன்: 89400 00109.

**பீ.பீ.குளம்**
எண்.5, ரத்தினசாமிநாடார் ரோடு,
மதுரை–2. 95009 15400

**வடமலையான் ஹெல்த்கேர்**

**திருநகர்**
3–வது பஸ் நிறுத்தம், மதுரை–6.
போன்–0452 4367555,
செல்போன்: 97900 32083.


**திண்டுக்கல்**
புது அக்ரஹாரம், பழனி சாலை,
திண்டுக்கல்–1. போன்:
0451 2426744, செல்போன்:
82205 06555, 75300 28111.

Since 1957

**வடமலையான்**
மருத்துவமனை (பி) லிமிடெட்

Since 1957

நோயாளிக்கு வலதுபுறப் பெருங்குடலில் இருந்த கட்டி உறுதிசெய்யப்பட்டது. மேலும், அந்தக் கட்டியானது அருகில் உள்ள அப்பெண்டிக்ஸ், சிறுகுடல் மற்றும் இடதுபுற மலக்குடலுக்கு அசாதாரண இணைப்பை உருவாக்கியிருந்தது. அதைச் சுற்றி நிணநீர்க் கட்டிகளும் உருவாகி இருந்தன.



இதனடிப்படையில், நோயாளிக்கு உடனடியாக அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. அறுவைசிகிச்சையின்போது, வலதுபுறப் பெருங்குடல் முழுவதுமாக அகற்றப்பட்டது. அத்துடன், அசாதாரண இணைப்புடன் ஒட்டியிருந்த இடதுபுறக் குடலின் ஒரு பகுதியும் அகற்றப்பட்டது. அறுவைசிகிச்சைக்குப் பிறகு நோயாளி நலமுடன் உள்ளார்.

இந்த மருத்துவ நிகழ்வு, ஆரம்பகட்ட நோயறிதலில் ஏற்பட்ட முரண்பாடுகளையும், ஒரு சிக்கலான நிலையை தீர்க்க துல்லியமான கண்டறிதல் எவ்வளவு அவசியம் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

மதுரை, திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனைகளில் அனைத்துவிதமான நவீன ஸ்கேன் வசதிகளும், அனுபவமிக்க மருத்துவர்களும் உள்ளனர். எங்கள் மருத்துவமனைகளின் வசதிகளை நோயாளிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## மருந்தகம் திறப்பு




**மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் வடமலையான் மருந்தகத்தின் 18-வது கிளை திறப்பு விழா மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநர் சந்திரா புகழகிரி தலைமையில் நடைபெற்றது.**


## சுகாதார விழிப்புணர்வு



மதுரை வருமானவரித்துறை அலுவலக ஊழியர்களிடையே சுகாதார விழிப்புணர்வு உரை நிகழ்த்திய வடமலையான் மருத்துவமனை பொதுமருத்துவர் டாக்டர் எஸ்.பானுச்சந்தர்பாண்டியன்.

# ஒருமுறை நீங்கள் அளிக்கும் ரத்தம் 4 உயிர்களைக் காப்பாற்றும்... உங்களுக்கும் நோய்கள் வராமல் தடுக்க உதவும்!

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹாரிசன் தனது வாழ்நாளில் 1173 முறை ரத்ததானம் செய்து கின்னஸ் சாதனை படைத்தவர். 1957-ம் ஆண்டு துவங்கி தொடர்ந்து 60 ஆண்டுகளுக்கும் மேலாக ரத்ததானம் செய்தார். அவர் கடைசி முறையாக 2018, ஆண்டு மே 11-ல் ரத்ததானம் செய்தார். 81 வயதுக்குப்பின் ஆஸ்திரேலிய கொள்கை ரத்ததானத்துக்கு இடமளிக்காததால், அதன்பின்னர் அவரால் ரத்ததானம் செய்யமுடியவில்லை.



ஜேம்ஸ் ஹாரிசன்

ரத்ததானம் செய்வதால் ஒரு உயிரைக் காப்பாற்றுவது மட்டும் அல்லாமல் உங்களுக்கும்கூட பல உடல் நலத்தை அளிக்கிறது. ஆண்கள் 3 மாதத்திற்கு ஒருமுறை ரத்ததானம் செய்யலாம். 18 வயது முதல் 60 வயது வரை ஆரோக்கியத்துடன் உள்ள யாரும் ரத்ததானம் செய்யலாம். பெண்கள் 4 மாதத்திற்கு ஒருமுறை ரத்ததானம் செய்யலாம்.

## ரத்ததானம் செய்வதால் ஏற்படும் பயன்கள்...

- சீரான இடைவெளியில் ரத்ததானம் செய்வதால் உடலிலுள்ள கொழுப்பு சத்தின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கும். மாரடைப்பு ஏற்படுவதை தவிர்க்கலாம்.
- ரத்ததானம் செய்வதால் உடலில் பல பாகங்களில் ஏற்படும் புற்றுநோயை வராமல் தடுக்கலாம்.
- ரத்ததானம் செய்வதால் கொலாஸ்டிரால் அளவை குறைத்து ரத்த அழுத்தத்தை சீராக வைக்கலாம்.
- ரத்ததானம் செய்வதால் அதிகளவில் இருக்கும் கொழுப்புச் சத்து மற்றும் கலோரிகள் எரிக்கப்படுவதால் உடலின் கட்டமைப்பு மிக ஆரோக்கியமாக இருக்கும்.
- ரத்ததானம் செய்வதால் உங்கள் உடலில் புதிய ரத்த அணுக்கள் உருவாக உதவும்.
- ரத்ததானம் செய்வதால் உடலில் உள்ள கூடுதல் இரும்புச் சத்துகள் குறையும். இதிலிருந்து பாலிசைத்தீமியா நோய் வராமல் தடுக்க முடியும்.
- நீங்கள் ஒருமுறை செய்யும் ரத்ததானம் 4 நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற உதவுகிறது. ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்கள், தட்டை அணுக்கள், பிளாஸ்மா ஆகியவை 3 நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டு அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள்.

**இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு வடமலையான் மருத்துவமனையின் 0452-3545400, 2545400 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொள்ளலாம்.**

Since 1957



# மனநலத்தை மேம்படுத்தும் உடற்பயிற்சி!

D.ராஜா M.P.T., இயன்முறை மருத்துவர்

மனித வாழ்வில் உடற்பயிற்சி மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. உடல் ஆரோக்கியம், மனஅமைதி, உற்சாகம் ஆகியவற்றை பெறுவதற்கு உடற்பயிற்சி அவசியம். தினசரி நடைபயிற்சி, யோகா, ஓட்டம், சைக்கிள் ஓட்டுதல் போன்ற எளிய பயிற்சிகள் பெரும் பலன்களை அளிக்கின்றன.

### உடற்பயிற்சியின் பலன்கள்

* உடல் வலிமை அதிகரிக்கும்
* நோய்எதிர்ப்பு சக்தி மேம்படும்
* ரத்தஓட்டம் சீராகும்
* மனஅழுத்தம் குறையும்
* உற்சாகம், நம்பிக்கை வளரும்

இன்றைய வேகமான வாழ்க்கையில், உடற்பயிற்சியை ஒரு பழக்கமாக்குவது அவசியம். தினசரி குறைந்தது 30–40 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு நல்ல பலன்களை அளிக்கிறது.

### உடற்பயிற்சியின் வகைகள்

**நடைபயிற்சி:** எளிமையானதும் அனைவருக்கும் ஏற்றதுமான பயிற்சி.

**யோகா:** உடல் மற்றும் மனதை ஒருங்கிணைக்கும் பயிற்சி.

**ஓட்டம் / சைக்கிள் ஓட்டுதல்:** உடல் சக்தியை அதிகரிக்கும்.

**விளையாட்டுகள்:** உடல் சுறுசுறுப்பையும், குழு ஒருமைப்பாட்டையும் வளர்க்கும்.

### மனநலத்தை மேம்படுத்தும்

உடற்பயிற்சி செய்வதால் மனஅழுத்தம் குறையும். உடலில் உற்பத்தியாகும் 'எண்டார்பின்' என்ற ஹார்மோன் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. இதனால் மனஅமைதி, நம்பிக்கை ஆகியவை வளர்கின்றன. மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் போன்றோருக்கு உடற்பயிற்சி மனஅழுத்தத்தைக் குறைப்பதற்கான மிகச்சிறந்த வழி.

### சமூக உறவை வளர்க்கும்

விளையாட்டுகள், குழுப் பயிற்சிகள் போன்றவை சமூக உறவை மேம்படுத்துகின்றன. நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவது, ஓடுவது, சைக்கிள் ஓட்டுவது போன்றவை உற்சாகத்தையும், ஒற்றுமையையும் வளர்க்கின்றன. சமூகத்தில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் சக்தி உடற்பயிற்சியில்தான் உள்ளது.

### ஆயுளை நீட்டிக்கும்

தினசரி உடற்பயிற்சி செய்வோர் நீண்ட ஆயுளுடன் வாழ்கிறார்கள் என்று பல ஆய்வுகள் கூறுகின்றன. இதயநோய், நீரிழிவு, உயர் ரத்தஅழுத்தம் போன்ற பல நோய்களைத் தடுக்கும் திறன் உடற்பயிற்சியில் உள்ளது. ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றும் ஒருவர் சுறுசுறுப்பாகவும், மகிழ்ச்சியாகவும் வாழமுடியும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

# வடமலையான்
## மருத்துவமனை(பி)லிமிடெட்
Since 1957

மதுரை | திண்டுக்கல்

NABH ACCREDITED
PATIENT SAFETY & QUALITY OF CARE




நான் வடமலையான் மருத்துவமனையில் **Kidney Transplant** செய்து கொண்டது எனது 19-வது வயதில்

- காவேரி

**சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை இப்போது திண்டுக்கல்லிலும்....**

### வடமலையான் சிறுநீரகத்துறையின் சிறப்பு அம்சங்கள்

- திண்டுக்கல்லில் முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மையம்
- அதிநவீன டயாலிசிஸ் பிரிவு
- Nocturnal டயாலிசிஸ் (இரவுநேர டயாலிசிஸ்) வசதி
- 24/7 அவசர சிகிச்சைப்பிரிவு
- மருத்துவ காப்பீட்டுத்திட்ட வசதிகள் உள்ளன.

**அவசர உதவிக்கு : 0451-244 44 44**

மேலும் விபரங்களுக்கு

| மதுரை | திண்டுக்கல் |
| --- | --- |
| 9566591238 | 7397011222 |
| 9A, வல்லபாய்ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002 | 649 A/2, அங்கு நகர், திண்டுக்கல்-624004. |
| Ph.0452-3545400, 2545400(100 Lines), | Ph:. 0451-3561000 (100 Lines), 2461000 |

Since 1957

## மருத்துவ முகாம்

## திண்டுக்கல்
















திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனை சார்பில் ஒட்டன்சத்திரம் சுலோச்சனா காட்டன் ஸ்பின்னிங் மில்லில் நடைபெற்ற பொதுமருத்துவம் மற்றும் புற்றுநோய்க்கான காரணங்கள் பற்றிய கலந்துரையாடல் முகாம்.



***Vadamalayan Hospitals was inagurated by the then Chief Minister "Karmaveerar" Thiru.K.Kamaraj in 1957. Vadamalayan Institute of Medical and Allied Health Sciences is a unit of Vadamalayan Hospital started in the year 2006, with the steadfast attempt of our Founder Chairman & President Dr. Pugalagiri Vadamalayan.*** Vadamalayan Hospitals Private Limited is a multi-speciality tertiary care centre with state of art technology, highly specialized medical professionals, which is fully accredited with NABH. Vadamalayan Hospitals Private Limited and PG Institute for Medical Sciences is accredited with National Board of Examination in Medical Sciences (NBEMS) for DNB courses like DNB & Diploma - Radio Diagnosis, DNB & Diploma Anesthesiology, DNB - Emergency Medicine, Diploma Paediatrics & Diploma Family Medicine. Allied health sciences students undergo internship training with the Vadamalayan Hospitals Private Limited.

## Institute Code : 444 The TamilNadu Dr. M.G.R. Medical University

| Courses Offered | Duration | Eligibility |
|---|---|---|
| B.Sc Nuclear Medicine Technology<br>பி.எஸ்.சி. நியூகிளியர் மெடிசன் டெக்னாலஜி | 4 Years ( Including 1 Year Internship)<br>4 வருடம் (1 வருட பயிற்சி காலம் உட்பட) | 12th Pass ( Biology must )<br>12 தேர்ச்சி (உயிரியல் பிரிவு மட்டும்) |
| B.Sc Cardiac Technology<br>பி.எஸ்.சி. கார்டியாக் டெக்னாலஜி | | |
| B.Sc Physician Assistant<br>பி.எஸ்.சி. பிஸிசியன் அஸிஸ்டெண்ட் | | |
| B.Sc Dialysis Technology<br>பி.எஸ்.சி. டயாலிசிஸ் டெக்னாலஜி | | |
| B.Sc Operation Theatre & Anaesthesia Technology<br>பி.எஸ்.சி. ஆப்ரேசன் தியேட்டர் & அனஸ்திசியா டெக்னாலஜி | | |
| B.Sc Radiography & Imaging Technology<br>பி.எஸ்.சி. ரேடியோ கிராபி & இமேஜிங் டெக்னாலஜி | | |
| B.Sc Accident & Emergency Care Technology<br>பி.எஸ்.சி. ஆக்ஸிடெண்ட் & எமர்ஜென்சி கேர் டெக்னாலஜி | | |

## Center Code : 745 Alagappa University

| | | |
|---|---|---|
| M.B.A Health Service Management<br>எம்.பி.ஏ (மருத்துவ மேலாண்மை) | 2 years<br>2 வருடம் | Any Degree<br>பட்டப்படிப்பு |
| Certificate in Nursing Assistant<br>செர்டிபிகேட் இன் நர்சிங் அசிஸ்டன்ட் | 1 year<br>1 வருடம் | 12th Pass<br>12th தேர்ச்சி |

## AVI Code : 690077 National Institute of Open Schooling (NIOS)

| | | |
|---|---|---|
| Diploma in Medical Laboratory Technology<br>டிப்ளமோ இன் மெடிக்கல் லெபாரட்டரி டெக்னாலஜி | 2 years<br>2 வருடம் | 12th Pass<br>12th தேர்ச்சி |
| Diploma in Medical Imaging Technology<br>டிப்ளமோ இன் மெடிக்கல் இமேஜிங் டெக்னாலஜி | 2 years<br>2 வருடம் | |

NIOS

- Placement opportunity
- Hostel Facility.
- Practical training in our hospital during the course period



CONTACT

SYMBOL OF CARE & TRUST

## VADAMALAYAN INSTITUTE OF MEDICAL & ALLIED HEALTH SCIENCES

(Run by Vadamalayan Memorial Trust)

**Vadamalayan Institute Administrative Office,**
Admin Block 1st Floor,
15, Jawahar Road, Chokkikulam, Madurai - 625002
Ph: **0452 - 3545491** | Mob : **77082 59595**
**paramedical@vadamalayan.org | www.vadamalayan.org**

Since 1957

Since 1957

# மருத்துவ முகாம்







திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனை சார்பில் சாணார்பட்டி ஒன்றியத்தில் உள்ள எமக்கலாபுரம் கிராமத்தில் நடைபெற்ற பொதுமருத்துவ முகாம்.









திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனை மற்றும் JESUS THE DIVINE HEALER CHARITABLE TRUST இணைந்து வேம்பார்பட்டியில் நடத்திய பொதுமருத்துவ முகாம்.



# வடமலையான்
# உடலுறுப்பு மாற்று சிகிச்சைப் பிரிவு

- உடலுறுப்புகள் செயலிழந்த நோயாளிகளுக்கு உடலுறுப்புமாற்று அறுவைசிகிச்சை மூலம் வாழ்வளிக்க இயலும்.
- சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயலிழந்த நோயாளிகளுக்கு உறவினர்கள் ஒரு சிறுநீரகம் அல்லது கல்லீரலின் ஒரு பகுதியினை தானமாக தர இயலும் .
- சிறுநீரகம் தானம் அளித்த நபரும் தானம் பெற்ற நோயாளி இருவரும் ஒரு சிறுநீரகத்துடன் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழலாம் .
- கல்லீரல் தானம் அளித்த நபரும் தானம் பெற்ற நோயாளி இருவருக்கும் கல்லீரல் முன்று மாதங்களில் முழுமையாக வளர்ந்துவிடும் .பின்னர் இருவரும் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழலாம் .
- உடலுறுப்பு தானம் தர கொடையாளிகள் இல்லாத பட்சத்தில் தமிழக அரசின் Transplant Authority Of TamilNadu (TRANSTAN) அமைப்பில் உடலுறுப்புகள் தானமாக பெற காத்திருப்பு பட்டியலில் நோயாளி தன்னை பதிவு செய்து கொள்ளலாம். மூளை சாவு வழியாக கிடைக்கும் உடறுப்புகளை TRANSTAN தர வரிசை அடிப்படையில் காத்திருப்பு பட்டியலில் இருக்கும் நோயாளிகளுக்கு வழங்குவர். இதன் வழியாகவும் உடலுறுப்புமாற்று அறுவைசிகிச்சை மேற்க்கொள்ளலாம் .

அனைத்து நிலை மக்களுக்கும் தரமான மருத்துவ சிகிச்சையை கொண்டு சேர்ப்பதனை லட்சியமாக கொண்ட நமது வடமலையான் மருத்துவமனைகளில் உடலுறுப்புமாற்று அறுவைசிகிச்சைகள் அரசின் அதிகாரம் பெற்று அனைத்து கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைத்த மருத்துவ சேவை மற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த நிபுணத்துவம் கொண்ட மருத்துவர் குழுவினால் வெற்றிகரமான உடலுறுப்புமாற்று அறுவைசிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

**இருதய மாற்று அறுவைசிகிச்சை | கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சை**
**சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை**
**உடலுறுப்புமாற்று ஒருங்கிணைப்பாளர்**
**மதுரை - 75400 59111**

**சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை**
**உடலுறுப்புமாற்று ஒருங்கிணைப்பாளர்**
**திண்டுக்கல் - 77085 88808**

## உடலுறுப்பு தானம் செய்வோம் ... உயிர்களைக் காப்போம். . .

- அரிதாக பல காரணங்களால் நோயாளிகளுக்கு மூளை சாவு ஏற்படும். மூளை சாவினை அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைப்படி 4 மருத்துவர்கள் இருமுறை சோதனை செய்து மூளை சாவு உறுதி செய்து இறப்பு சான்றிதழ் வழங்குவர்.
- நோயாளி இறந்து விட்டாலும் செயற்கை சுவாச கருவி மற்றும் மருத்துவம் மூலம் நோயாளியின் உடல் உறுப்புகள் தற்காலிகமாக பாதுகாக்கப்படும்.
- இத்தருணத்தில் நோயாளியின் உறவினர்கள் அனுமதி பெற்று இருதயம், நுரையீரல், கல்லீரல், கணையம், செரிமான பகுதிகள், சிறுநீரகங்கள் போன்ற உறுப்புகளும் மேலும் கண்கள், இருதய வால்வுகள், எலும்பு, தோல், எலும்புகள் etc., என 8 க்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு உறுப்புகள் மற்றும் திசுக்கள் தானமாக தர இயலும்.
- இவ்வாறு தானமாக கிடைக்கும் உடலுறுப்புகள் & திசுக்களை தமிழக அரசின் Transplant Authority Of TamilNadu (TRANSTAN ) அமைப்பில் உடலுறுப்புகள் பெற காத்திருப்பு பட்டியலில் பதிவு செய்திருக்கும் நோயாளிகளுக்கு தானமாக தரவரிசை அடிப்படையில் வழங்கப்படும்.
- உடலுறுப்பு தானம் செய்ய எந்த ஒரு முன்பதிவுகளும் ,கொடை அட்டையும் கட்டாயம் இல்லை. உறவினர்களால் மட்டுமே நமது உடலுறுப்பு தான விருப்பத்தினை நிறைவேற்ற முடியும் அவர்களுக்கு நமது உடலுறுப்பு தான விருப்பம் குறித்து நாம் முன்னரே தெரியபடுத்த வேண்டும்.
- நமது உடலுறுப்பு தான விருப்பத்தினை அனைவருக்கும் வெளிப்படுத்த கொடை அட்டை உதவும். கீழ்கண்ட அரசின் இணையதளத்தில் பதிவு செய்து கொடை அட்டை பெற்று கொள்ளலாம் .




**www.transtan.tn.gov.in**

TRANSTAN


9A, வல்லபாய்ரோடு, சொக்கிகுளம், மதுரை-625002
Ph.0452-3545400, 2545400(100 Lines),

649 A/2, அங்கு நகர், திண்டுக்கல்-624004.
Ph:. 0451-3561000 (100 Lines), 2461000







மதுரை வடமலையான் துணை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழா

# முகப்பொலிவுக்கு ஃப்ரூட் பேக்!

**J.ஜான்சி ஜெனிதா** MSc
தலைமை உணவு ஆலோசகர், திண்டுக்கல்

முகம் பொலிவாகவும், சிவப்பாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் ஜொலிக்க பழங்களைக் கொண்டு வீட்டிலேயே இன்ஸ்டன்ட் ஃபேஸ் பேக்குகளை தயாரித்துப் போடலாம். இந்த பேக்குகளை தொடர்ந்து பயன்படுத்தும்போது முகத்தில் சுருக்கங்களை நீக்கி, முகப்பரு, தழும்புகளைப் போக்கும். பழங்களிலான ஃபேஸ் பேக்குகளை எவ்வாறு தயாரிப்பது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.



**பப்பாளிக் கூழ்:** சிறிது பப்பாளிக் கூழுடன் 1 டேபிள் ஸ்பூன் தேன் கலந்து அதை முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகம் பொலிவுபெறும்.

**எலுமிச்சைச் சாறு:** 1 டீஸ்பூன் மஞ்சள் தூள், 2 டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு கலந்து விழுதாக்கி முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகம் பளிச்சிடும்.

**தக்காளிக் கூழ்:** ஒரு டேபிள் ஸ்பூன் தக்காளிக் கூழுடன், ஒரு டேபிள் ஸ்பூன் ஓட்ஸ் பொடி சேர்த்து விழுதாக்கி முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து, வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகம் பளபளப்பாகவும் மிருதுவாகவும் மாறும்.

# LET'S TRANSFORM THE HEALTHCARE SCENARIO OF DINDIGUL



**Super Speciality Tertiary Care Centre**

## OUR MAJOR SPECIALITIES

- Anaesthesiology
- Accident & Emergency Medicine
- Cardiology / Cardiac Surgery
- Dentistry
- Dermatology
- Diabetology
- E.N.T
- Gastroenterology
- Surgical Gastroenterology
- Laparoscopic Surgery
- General Medicine / General Surgery
- Gynaecology
- Nephrology / State of the Art Dialysis Centre
- Neurology / Neuro Surgery
- Oncology
- Medical, Surgical and Radiation Oncology
- Opthalmology
- Orthopaedics / Traumatology
- Paediatrics & Neonatology
- Pulmonology / Interventional Pulmonology
- Psychiatry
- Radiology
- Urology
- Pain & Palliative Clinic
- Knee Clinic
- Liver CLinic

## OTHER SERVICES

- State of the art Linear Accelerator ( Cancer Radiation Treatment)
- M.R.I Scan
- C.T. Scan
- C.T. Scan Guided Procedure
- Digital X-Ray
- Mammography
- Ultrasound Scan / Doppler Studies
- USG Guided Procedure
- E.C.G
- ECHO Scan
- T.E.E. Scan
- TMT
- Holter E.C.G
- 24 Hrs ABP
- E.E.G / E.M.G
- Sugantham Home Health Care Service
- Sleep E.E.G
- Endoscopy
- E.R.C.P
- Bronchoscopy
- Uroflowmetry
- Haematology
- Bio Chemistry
- Microbiology
- Clinical Pathology
- Serology
- Molecular Biology
- Endocrinology
- Pathology
- Histopathology
- PFT
- ACLS Ambulance

**0451 2444444**

**0451 3561000** (100 Lines)

Since 1957

**Vadamalayan Hospitals (P) Ltd.,**

No. 649 A/2, Angu Nagar, Dindigul - 624004.
0451 2461000 info@vadamalayan.org www.vadamalayan.org

Since 1957



# உடல் வளர்ச்சிக்கு உதவும் புரதம்!

●தீபா செந்தில்ராஜன் MSc
தலைமை உணவு ஆலோசகர்

புரதம் என்பது நம் உடலின் அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கும் முக்கியச் சத்து. இது அமினோ அமிலங்களால் ஆனது.

தசைகள், தோல், முடி, நகம், ஹார்மோன்கள், என்சைம்கள் அனைத்தும் புரதத்தால் உருவாக்கப்படுகின்றன. மனித உடலின் வளர்ச்சி, பழுதுபார்க்கும் திறன், சக்தி உற்பத்தி, நோய்எதிர்ப்பு சக்தி ஆகிய அனைத்துக்கும் புரதம் அத்தியாவசியம்.

### தசை வளர்ச்சி

உடற்பயிற்சி செய்பவர்களுக்கு தசை வளர்ச்சிக்கு புரதம் அவசியம். இது தசை நார்களை வலுப்படுத்தி, உடல் சக்தியை அதிகரிக்கிறது.

### உடல் பழுதுபார்க்கும் திறன்

காயம், நோய் அல்லது உடல் சோர்வு ஏற்பட்டால், புரதம் உடலை மீண்டும் சீராக்க உதவுகிறது. உடலின் பழுதுபார்க்கும் செயல்பாட்டில் புரதம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

### ஹார்மோன்கள் மற்றும் என்சைம்கள்

உடலின் பல்வேறு செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் ஹார்மோன்கள், என்சைம்கள் புரதத்தால் உருவாகின்றன. இதனால் உடல் இயங்கும் முறைகள் சீராக இருக்கும்.

### நோய்எதிர்ப்பு சக்தி

புரதம் உடலின் நோய் எதிர்ப்புசக்தியை அதிகரித்து, தொற்றுகளைத் தடுக்கும். உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கும் முக்கியச் சத்து.

### முடி மற்றும் தோல் ஆரோக்கியம்

புரதம் நிறைந்த உணவு உட்கொள்வதால் முடி ஆரோக்கியமாகவும், தோல் பிரகாசமாகவும் இருக்கும். முடி உதிர்வு குறையும்.

### எடைக் கட்டுப்பாடு

புரதம் அதிக நேரம் பசியை அடக்கிவைக்கும். இதனால் அதிக உணவு உட்கொள்ளாமல் எடையைக் கட்டுப்படுத்த முடியும். எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கு புரதம் நிறைந்த உணவு உதவியாக இருக்கும்.

### புரதம் நிறைந்த உணவுகள்

பருப்பு வகைகள் (துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, கடலை) பால், தயிர், பன்னீர் முட்டை, மீன், கோழி சோயா பீன்ஸ், விதைக்கொட்டைகள் (வேர்க்கடலை, பாதாம், முந்திரி) மொத்தத்தில், புரதம் என்பது நம் உடலின் வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சக்திக்கு அத்தியாவசியமான சத்து.

தினசரி உணவில் புரதம் நிறைந்த உணவுகளைச் சேர்ப்பது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் என அனைவருக்கும் புரதம் தேவையானது.


4
தலைமுறைகளின்
நம்பிக்கை!
1957ல் கர்மவீரர் காமராஜர் அவர்கள் பொற்கரத்தால் திறந்து வைக்கப்பட்ட
உங்களுக்கான
மருத்துவமனை
இன்லான்டு லெட்டர் காலம் முதல் இன்ஸ்டாகிராம் காலம் வரை
உங்கள் நம்பிக்கையில் முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்படுகிறோம்.
"Evidence based medicine"ஐ தனது தாரக மந்திரமாகக் கொண்ட
டாக்டர் வடமலையான் அவர்களின் எண்ணத்தை 67 வருடங்களுக்கு
மேலாக எடுத்து செல்கிறோம்.
நான்கு தலைமுறைகளாக உங்கள் நம்பிக்கையில்
வடமலையான் மருத்துவமனை.
அதே நம்பிக்கையுடன் 68-வது ஆண்டில்
அடியெடுத்து வைக்கின்றோம்...
NABH ACCREDITED
Since 1957
Vadamalayan
Hospitals [P] Ltd.,
Multi Speciality Tertiary Care Centre
வடமலையான் மருத்துவமனை
மதுரை: 0452 - 3545400 திண்டுக்கல்: 0451 - 3561000

# வெற்றிக்குத் தயாராகுங்கள்!

● L.K.கவிதா
செய்தி ஆசிரியர்



கடந்த காலம் வெறும் அனுபவங்கள். எதிர்காலம் இன்னும் எழுதப்படவில்லை. அந்த வெற்றுப் பக்கத்தை எவ்வாறு நிரப்பப்போகிறீர்கள்? 'மாற்றம்' என்பது சுற்றுப்புறத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ இல்லை; அது நமக்குள் இருந்துதான் தொடங்கவேண்டும்.

இந்த வருடத்தின் ஒவ்வொரு நாளும் விலைமதிப்பற்றது. அவற்றைக் கனவு காண்பதற்கும், பயப்படுவதற்கும் செலவிடாதீர்கள். செயல்படுங்கள்! உங்களைச் செதுக்கிக்கொள்ளத் தேவையான சிற்பி நீங்கள் மட்டுமே. உண்மையான வெற்றியின் விதைகளை விதைக்கத் தயாராகுங்கள்.

புத்தாண்டு தீர்மானங்கள் என்பது பலருக்கும் சில நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும் ஒரு வழக்கமாக இருக்கலாம். ஆனால், இந்த ஆண்டு நாம் அதை மாற்றவேண்டும்.

ஆழமான சிந்தனையுடன், நம் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கும் ஒவ்வொரு இலக்கும், நம்மை அடுத்த கட்டத்துக்கு இட்டுச்செல்லும். ஒரே நாளில் மலையைப் புரட்ட நினைக்க வேண்டாம்; சிறியதாகத் துவங்குங்கள்.

இலக்கை நிர்மாணித்தவுடன் நின்றுவிடாமல், அதை அடைவதற்கான தெளிவான ஒரு 'செயல்திட்டத்தை' வகுக்கவேண்டும். திட்டம் இல்லாமல் இலக்குகள் வெறும் கனவுகளாகவே முடிந்துவிடும். சவால்கள் வரும்போது துவண்டுபோகாதீர்கள். தோல்வி என்பது ஒரு திருப்புமுனை மட்டுமே.

உங்களைச் சுற்றியுள்ளவர்கள் என்ன சொன்னாலும், உங்களால் முடியும் என்று நீங்கள் நம்பும்போது, பாதி வெற்றி அங்கேயே கிடைத்துவிடுகிறது. உங்களுடைய பலங்கள் மற்றும் தனித்துவமான திறமைகளைக் கண்டறிந்து, அவற்றை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள். கடந்த காலத்தில் நீங்கள் அடைந்த சிறிய வெற்றிகளைக்கூட நினைவுகூருங்கள். அந்த உணர்வு உங்களை முன்னோக்கித் தள்ளும்.

உலகம் அதிவேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. நீங்கள் முன்னேற வேண்டுமென்றால், எப்போதும் கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். புதிய திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துங்கள். எல்லா இலக்குகளையும் அடைவதற்கு மிக முக்கியமான அடித்தளம் உடல் மற்றும் மன ஆரோக்கியம் ஆகும். சத்தான உணவை உண்ணுங்கள், தினசரி உடற்பயிற்சியை ஒரு பழக்கமாக்குங்கள்.

மனஅழுத்தத்தைக் குறைத்து, மனஅமைதிக்காக தியானம் அல்லது உங்களுக்குப் பிடித்த பொழுதுபோக்குகளைச் செய்ய நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே, உங்களுடைய மற்ற இலக்குகளை வெற்றிகரமாக அடையமுடியும்.

புத்தாண்டின் ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சி, சாதனை, கற்றல் மற்றும் அன்பால் நிரப்புவது உங்களுடைய பொறுப்பு. புதிய தொடக்கங்களை உற்சாகத்துடன் வரவேற்று, ஒவ்வொரு நாளையும் ஒரு கொண்டாட்டமாக மாற்றுங்கள். புத்தாண்டில் இனிமையான தருணங்கள் உங்களுடையதாக இருக்கும்!

**கேள்வி:** எனது தாய்க்கு 58 வயதாகிறது. மெனோபாஸ் நிலையை எட்டி 6 ஆண்டுகளாகின்றன. அவருக்கு தினமும் இரவு சரியாக தூக்கம் வருவதில்லை. பெரும்பாலும் அதிகாலையில்தான் தூங்குகிறார். இதற்கு என்ன காரணம்?

**எஸ்.ஜெயராணி,** சிம்மக்கல்.

**பதில்:** தூக்கமின்மைக்கு பல காரணங்கள் உள்ளன. உயர்ரத்த அழுத்தம், மனஅழுத்தம், நீரிழிவு நோய் போன்றவை இரவு தூக்கத்தை பெரிதும் பாதிக்கும். மெனோபாஸ் நிலையை அடைந்து 5 ஆண்டுகளைக் கடந்துவிட்டதால் அது காரணமாக இருக்காது. மருத்துவரை அணுகி முழுஉடல் பரிசோதனை செய்து தூக்கமின்மைக்கான சரியான காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை பெறுங்கள்.

---

**கேள்வி:** எனது 8 மாத பெண் குழந்தைக்கு தொடர்ந்து 6 மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டுமே புகட்டினேன். அதன்பின்னர் திடஉணவுடன் தாய்ப்பாலையும் சேர்ந்து புகட்டிவருகிறேன். ஆனால் தற்போதெல்லாம் அது தாய்ப்பாலை விரும்பிப் பருகுவதில்லை. மிகவும் வற்புறுத்தி புகட்டவேண்டியுள்ளது. குழந்தை தாய்ப்பாலை தவிர்க்கும்பட்சத்தில் அதை நிறுத்திவிடலாமா?

**கே. உமாதேவி,** நத்தம்.

**பதில்:** குழந்தைக்கு ஒரு வயதாகும் வரை தாய்ப்பாலை நிறுத்தக்கூடாது. காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை திட உணவுகளைப் புகட்டவேண்டும். இரவு 9 மணியில் இருந்து காலை 7 மணி வரை குழந்தை கண்விழித்து அழும்போதெல்லாம் தாய்ப்பாலை புகட்டவேண்டும். அப்போதுதான் குழந்தை எதிர்ப்புசக்தியுடன் ஆரோக்கியமாக வளரும்.




**கேள்வி:** 53 வயதாகும் எனக்கு கடந்த 6 மாதங்களாக மாதவிடாய் வரவில்லை. யூரிக் ஆசிட் அதிகமாக இருந்தது. அதற்கு ஆயுர்வேதத்தில் சிகிச்சை பெற்றேன். தற்போது குறைந்துவிட்டது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக சிறுநீர் நுரைத்து வெளியேறுகிறது. சிறுநீர் கழிக்கும்போது வலி, எரிச்சல் இல்லை. இதற்கு என்ன காரணம்?

**எம்.ரோஸ்மேரி,** தேனி.



**பதில்:** சிறுநீர்த் தொற்று காரணமாக சிறுநீர் நுரைத்து வெளியேறலாம். யூரிக் ஆசிட் அதிகமாக இருந்ததாகவும் கூறியுள்ளீர்கள். எனவே மருத்துவரை உடனடியாக அணுகி உரிய பரிசோதனை செய்து, சரியான காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை பெறுவது நல்லது.




நோய்கள் மற்றும் சிகிச்சைகள் தொடர்பான சந்தேகங்களுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ நிபுணர்கள் பதில் அளிக்கின்றனர்.

உங்கள் கேள்விகளை
**‘டாக்டரை கேளுங்கள்’** பகுதி,
வடமலையான் மருத்துவமனை,
நலம் மருத்துவ மாத இதழ்,
9-ஏ, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம்,
மதுரை-625 002 - என்ற முகவரிக்கோ

அல்லது nalam@vadamalayan.org என்ற இ-மெயில் முகவரிக்கோ எழுதி அனுப்பலாம்.



# UNLOCK THE KEY TO LIVE A SWEET LIFE

## HEALTH CHECKUP PACKAGES

- Master Health Checkup ( Basic & Advanced )
- Executive Health Checkup Men & Women
- Whole Body Health Checkup - Men
- Whole Body Well Women Health Checkup
- Platinum Health Checkup ( Men & Women )
- Preventive Cardiology Health Checkup
- Child Health Checkup
- Pre Employment Health Checkup
- Diabetes Vascular Health Checkup
- Diabetes Health Checkup
- Senior Citizen Health Chekcup ( Men & Women )

**Vadamalayan Hospitals (P) Ltd.,**

Since 1957

**Super Speciality Tertiary Care Centre**

Madurai | Dindigul

**Madurai**

9A, Vallabhai Road, Chokkikulam, Madurai-625002.
Ph: 0452 3545400 ( 100 Lines), 2545400,
For Emergency : 0452 250 1033

**Dindigul**

649 A/2, Angu Nagar, Dindigul - 624001,
Ph: 0451 3561000 ( 100 Lines), 0451 2461000.
For Emergency : 0451 244 44 44

web:www.vadamalayan.org vadamalayan hospitals

Since 1957


திண்டுக்கல்லின்
அதிநவீன
மருத்துவ முகவரி
வடமலையான்
மருத்துவமனை
Since 1957
Vadamalayan
Hospitals (P) Ltd.
649A, அங்குநகர், செட்டிநாயக்கன்பட்டி,
திண்டுக்கல்.
info@vadamalayan.org
www.vadamalayan.org
0451 2444444
0451 3561000 (100 Lines)